
உ

சிவமயம்



சுழிபுரத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட

பிரபல வைத்தியர், அதிபர்

# அமரர் திரு. குணரத்தினம் செல்வத்துரை

அவர்களின் சிவபதப்பேறு குறித்த

# நினைவு மலர்

உ
சிவமயம்



ழுளாய் குடி தண்டிகை
கனகராயர் முதலி மகள்
செங்காரபிள்ளை உடையார் பெண் செம்பாத்தை
வழித்தோன்றல் அருணாசல உடையார் மகன்
இராயர் மகள் குணரத்தினம் -- முத்துப்பிள்ளை
மகன்

அமரர்

# குணரத்தினம் செல்வத்துரை

(அதிபர், பிரபல வைத்தியர்)
அவர்களின்

# நினைவு மலர்

15-12-2000

உ

# சமர்ப்பணம்

எமது அன்புத் தெய்வத்தின்
திருப்பாதங்களுக்கு

## இந்நூல் சமர்ப்பணம்

மனிதருள் மாணிக்கமாய் அன்பு நிறைந்த
பேரொளியாய் இன்சொல் பேசி
அன்புடன் எம்மைப் பேணிக்காத்து,
பண்புடனும், பாசத்துடனும், நேசத்துடனும்,
இன்முகத்தினனாய்
வாழ்வாங்கு வாழ்ந்து இன்று
வானுறையும்
தெய்வமாகிவிட்ட எமது
அன்புத் தந்தையின்
திருப்பாதங்களுக்கு இம்மலரினைக்
காணிக்கையாக்குகின்றோம்.

மனைவி, மக்கள், மருமக்கள்
பேரப்பிள்ளைகள்.

உ

சிவமயம்



மலர்வு
03.01.1927

உதிர்வு
15.11.2000

அமரர்

# திரு. குணரத்தினம் செல்வத்துரை

(அதிபர், பிரபல வைத்தியர்)

திதி வெண்பா

விக்கிரம ஐப்பசியில் விளங்கும் சதுர்த்திதனில்
பக்குவஞ்சேர் செல்வத்துரை சென்றார்-இப்புவியில்
வாழ்ந்தது போதுமென வானுலகு தானடைந்தார்
தாழ்சடையான் பாதம் தொழ

உ

சிவமயம்

# அமரர் குணரத்தினம் செல்வத்துரை

அவர்களின்

# வாழ்க்கை வரலாறு

ஈழத்திருநாட்டில் யாழ்குடாநாட்டின் மேற்றிசை அமைந்த சுழிபுரத்தில் பிரபல வைத்தியர் அமரர் குணரத்தினம் முத்துப்பிள்ளை அவர்களின் புத்திரனாகச் செல்வத்துரை அவர்கள் 1927ம் ஆண்டு தைத்திங்கள் 3ம் திகதி பூராட நட்சத்திரத்தில் பிறந்தார். பெற்றோரின் இல்லறமாம் நல்லறத்தில் இனிதே பெற்றெடுத்த புதல்வனாக இவர் விளங்கினார்.

**"கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி**
**எல்லா உயிரும் தொழும்"**

என்னும் திருவள்ளுவர் வாக்கிற்கு அமையச் சைவ போசனம் உண்பவராக விளங்கினார்.

இவர் சிறுவயதில் செங்காரபிள்ளை என்னும் நாமத்துடன் விளங்கினார். இவரது தந்தையார் (1934ல்) இவருக்கு ஏழாவது வயதில் கொழும்பு நகரில் அகால மரணமடைந்தார். இவர் தனது ஆரம்பக் கல்வியை சுழிபுரம் ஐக்கிய சங்க சைவ வித்தியா சாலையிலும் பின்னர் திருநெல்வேலி முத்துத்தம்பி வித்தியாலயத்திலும் கற்றார். கல்வி கற்கும் போது பண்டிதமணி கணபதிப்பிள்ளை ஐயாவின் நன் மாணாக்கனாக விளங்கினார். 1949ம் ஆண்டில் ஆசிரியராக பதவி ஏற்று ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் தமிழ் மொழி ஆசிரியராகப் பயிற்சி பெற்றார். மறுபுறம் இவர் பரம்பரைத் தொழிலே தெய்வம் எனக்கொண்டு ஆயுள்வேத வைத்தியத்தில் ஈடுபட்டார். 1956-04-02ல் பதியப்பட்ட வைத்தியரானார். அத்தோடு கமத்தொழிலிலும் ஆர்வம் காட்டி மிளிர்ந்தார்.

இவர் இறுதியாகப் பொன்னாலை வரதராசப் பெருமாள் வித்தியாசாலையில் அதிபராக இருந்து 1987ல் ஓய்வு பெற்றார். தொடர்ந்தும் ஆயுள்வேத வைத்தியத்தில் புகழ் பெற்றவராகவும் கைநாடி பார்ப்பதில் வல்லவராகவும், ஒருவர் கடும் சுகயீனம் என்றால் அவருக்கு எத்தனை மணிக்கு சீவன் போகும் என்பதை சொல்லும் வல்லவராகவும் தீராத நோய்களைத் தீர்ப்பவராகவும் விளங்கினார். எத்தனையோ தீராத நோய்கள் உள்ளவர்கள் இவரை நாடிவந்து தமது நோய் நீங்கப் பெற்றனர்.

இவருக்கு மல்லாகப் பதியில் வாழும் பூதவுடையார் கதிர் காமவுடையார் வழியில் வந்த மயில்வாகனம் (தம்பிப்பிள்ளை) வள்ளிப்பிள்ளையின் அருந்தவப் புதல்வி பொன்னம்மாவைத் தனது இல்வாழ்க்கைத் துணைவியாக 1955ம் ஆண்டு ஏற்றுக்கொண்டு,

"இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும்
நல்லாற்றின் நின்ற துணை"

என்பதற்கிணங்கத் தமது இல்லறத்தை நடாத்தி வந்தார்.

காலஞ்சென்ற சிங்கப்பூர் பொன்னம்பலம் இராசம்மா, காலம் சென்ற சுப்பிரமணியம் (கூட்டுறவுப் பரிசோதகர்) காலம் சென்ற வல்லிபுரம் (சிறைச்சாலை அதிகாரி) முத்துத்தம்பி (கல்வித் திணைக்களம் ஓய்வுபெற்ற இலிகிதர்) தனலக்சுமி என்பவர்கள் இவரது மைத்துன மைத்துனிகளாவர்.

இவரின் இல்லற வாழ்வின் பயனாக இராசரத்தினம், சற்குணாம்பிகை, பொன்குணரத்தினம் வரதரத்தினம், ஹிமாலய ரத்தினம், கிருபாரத்தினம், பத்மாம்பிகை என்னும் ஏழு நற்செல்வங்களைப் பெற்றார்.

"தந்தை மகற்காற்றும் உதவி அவையகத்து
முந்தி இருப்பச் செயல்"

என்னும் வள்ளுவன் பொய்யா மொழிக்கு ஏற்ப பிள்ளைகளைக் கல்வியிற் சிறந்தவர்களாக வாழ நல்வழிப் படுத்தினார்.

மூத்த புதல்வன் இராசரத்தினம் தேசிய தொழில் பயின்று சீநோவர் அன்ரூஸ் கம்பனியில் வேலைசெய்து பின் டென்மார்க் சென்று அங்கு சீரும் சிறப்புமாக வாழ்ந்து வருகிறார். இவர் சிறுப்பிட்டி சின்னப்பா தங்கம்மாவின் இரண்டாவது மகள் பிறேமாவை மணம்முடித்து அதன் பயனாக மூர்த்திரத்தினம், குணரத்தினம், கஜரத்தினம் ஆகிய மழலைச் செல்வங்களைப் பெற்றுச் சென்ற வருடம் குடும்பத்தினருடன் இங்கு வந்து அவருடன் ஒன்று சேர்ந்து களித்து இன்புற்று டென்மார்க் சென்று வாழ்கின்றனர்.

இரண்டாவது புதல்வி சற்குணாம்பிகை என்பவருக்கு அராலி மேற்கைச் சேர்ந்த கந்தசாமி வள்ளிநாயகியின் மூத்தபுதல்வன் இராசகுலேந்திரன் (Pharmasist) பாமசிஸ்ற் என்பவரை மணம் முடித்து வைத்து அதன் பயனாக கரன், றோசினி என்னும் பேரச் செல்வங்களைத் தம்மோடு வைத்திருந்து அன்புடனும் ஆதரவுடனும் அரவணைத்து வளர்த்தார். அவர்களுக்குத் திருக்குறளை மனனம் செய்ய அன்போடு தினமும் சொல்லிக் கொடுப்பார்.

மூன்றாவது மகன் பொன்குணரத்தினம் உயர்படிப்பைத் திறம்படக் கற்றார். பல தனியார் கல்வி நிலையங்களின் இயக்குனராகவும் ஆசிரியராகவும் திகழ்ந்தார். பொதுச் சேவைகளிலும் ஈடுபட்டுப் பின் தந்தையின் சொற்படி மூளாயைச் சேர்ந்த தவபாக்கிய நாதன் பத்மதேவி தம்பதிகளின் மூத்த புதல்வி சங்கீத ஆசிரியை திலகவதியாரை (மூளாய் சைவப்பிரகாச வித்தியாசாலை, தற்போது மல்லாவி மத்தியகல்லூரி சங்கீத ஆசிரியை சங்கீத டிப்ளோமா) மணமுடித்தார். அதன் பயனாக பசுந்தமிழன், இன்னிசைத்தமிழன் என்னும் பேரச்செல்வங்களைப் பெற்று மகிழ்ந்தார்.

நான்காவது மகனும் நடுவில் மகனுமான வரதரத்தினம் இலங்கை சீமெந்துக் கூட்டுத்தாபனத்தில் தேசிய தொழில் பயின்று நிரந்தர தொழிலைப்பெற்று தனது தந்தையாரின் வைத்தியத் தொழிலைப் புன்னாலைக்கட்டுவன் சந்தி, புத்தூர், அக்கராயன், கோட்டைகட்டிய குளம் போன்றவற்றில் நடாத்திவந்தார். இவருக்குக் கருகம்பானையைச் சேர்ந்த கதிர்காமத்தம்பி செல்லம்மாவின் (இ. போ. ச. அதிகாரி) மூன்றாவது புதல்வி சாந்தினியை (கலைமாணி (B. A.) பன்னாலை சேர் கனகசபை அ. த. க. பாடசாலையில் கல்வி கற்பிக்கும் ஆசிரியை) மணம்முடித்து அதன் பயனாக டிசாரட்ணம் என்னும் பேரனைப் பெற்று மகிழ்ந்தார்.

ஐந்தாவது பிள்ளை நான்காவது புதல்வன் ஹிமாலயரத்தின த்திற்குச் சிறுப்பிட்டி சின்னப்பா தங்கம்மாவின் இளைய புதல்வி சிவலஷ்மியை மணமுடித்து வைத்தார். இவர்களுக்கு தசரத்தினம் மகிழா என்னும் பேரச் செல்வங்களை பெற்று மகிழ்ந்தார். இவர்கள் கனடாவில் ரொறொன்டோவில் சீரும் சிறப்புமாக வாழ்ந்து வருகின்றனர்.

ஆறாவது பிள்ளையும் ஐந்தாவது புதல்வனுமாகிய கிருபா ரத்தினம் இந்தியாவில் ஆயுள்வேத வைத்தியத்தைப் பயின்று கொண்டு சுகமாக வாழ்கின்றார்.

ஏழாவது பிள்ளையும் இரண்டாவது புத்திரியும் கடைசிப் பிள்ளையுமாகிய பத்மாம்பிகை கலைமாணிப்பட்டம் (B. A.) பெற்று இலங்கை உயர் தொழில் நுட்பக்கல்வி நிறுவனம் யாழ்ப்பாணத்தில் எழுதுனராகக் கடமைபுரிகிறார். இவர் தந்தைக்கும் குடும்பத்தினருக்கும் உதவியாக இருந்து கடமையைச் செவ்வனே நிறைவேற்றி வருகின்றார்.

அன்னாரின் மூத்த சகோதரி சுழிபுரத்தில் வாழ்ந்த அமரர் டாக்டர் தெய்வானைப்பிள்ளை பூலோகசுந்தரம் என்பவர்களுக்கு பிள்ளைகளாக டாக்டர் கயிலாயநாதன் (கொழும்பு) டாக்டர் மனோரஞ்சிதம் தவத்துரை மட்டக்களப்பில் தொழிலின் நிமித்தம் வாழ்ந்து வருகின்றனர்.

இரண்டாவது சகோதரி டாக்டர் சிவக்கொழுந்து இராசா கந்தசாமி சுழிபுரத்தில் வாழ்ந்து வருகின்றார்.

மூத்த சகோதரன் டாக்டர் சங்கரப்பிள்ளை நடராசா என்பவர் சுழிபுரத்தில் வாழ்ந்து வருகின்றனர். இவர்களுக்கு பிள்ளைகளாக கோகிலாம்பாள் (கனடா) திருசிற்றம்பலம் (அவுஸ்திரேலியா), செல்வலக்குமியம்மாள் (கனடா) விக்னேஸ்வரன் (கனடா) வாழ்ந்து வருகின்றனர்.

இவருக்கு இளையவர் திருச்செல்வம் (அம்பனை சந்தியில் இருந்தவர்) பின் இடம்பெயர்வால் நுவரெலியாவில் வாழ்ந்து வருகின்றனர். இவர்களது பிள்ளைகள் ஜெயராசா (சுவிஸ்), விமலாதேவி (மல்லாவி) [redacted] தர்சினியும் ஆவார்கள்.

அமரர் செல்வத்துரை தனது ஓய்வு நேரத்தைச் சற்றேனும் வீணாக்காது தம்மை நாடிவந்த உற்றார் உறவினர் நண்பர்களுக்கு திருமண வாழ்த்துப்பா, நினைவு மலர் வரலாற்றுப் பாடல் எழுதிக் கொடுப்பார். அதுமட்டுமல்ல கந்தபுராணம், இலக்கண, இலக்கிய சமய வைத்திய நூல்கள் கற்பதோடு அதன்படி வாழ்ந்தும் காட்டினார். தனது வாழ்நாள் முழுக்க தூய வெண்ணிற வேட்டி சால்வை தலைப்பா அல்லது உத்தரியம் திருநீறு சந்தனப் பொட்டிட்டு மிடுக்காக கம்பீரமாக சாளி அல்லது சைக்கிளில் உலாவருவார். அன்பர் இறுதிவரை காலைக்கடன் முடித்தபின்பு பஞ்ச புராணம் ஓதிய பின்பே நீராகாரம் எடுத்துவந்த உத்தமர். கடமை கண்ணியம், கட்டுப்பாட்டுடன் வாழ்ந்த கணவனாகவும் ஆசானாகவும், வைத்தியராகவும், அதிபராகவும், தந்தையாகவும், மாமாவாகவும், பேரனாகவும் வாழ்ந்து உற்றார், உறவினர் நண்பர்களின் நன்மதிப்பைப் பெற்றவர். இவரது சைவ போசன பரம்பரையை வளர்ப்பதற்கு அவரது பிள்ளைகளையும் அமரர் வழிகாட்டி வைத்துள்ளார் என்பது மிகையாகாது.

அவ்வாறாக வாழ்ந்த குணரத்தினம் செல்வத்துரை அவர்களின் 2000ம் ஆண்டு விக்கிரம வருடம் புதன்கிழமை முன்னிரவு 11-00 மணியளவில் சதுர்த்தி திதியில் திருவாதிரை நட்சத்திரத்தில் யாழ். பெரியாஸ்பத்திரியில் தனது மூன்றாவது மகன் வரதன் அருகில் இருக்க 73வது வயதில் இவ்வுலகவாழ்வை நீத்து பறாளாய் விநாயகப் பெருமானின் பாதார விந்தங்களை எய்தினார். அவர் ஆத்மா சாந்தி அடைவதாக.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

உ
சிவமயம்

# அமரர் பங்குபற்றிய நிகழ்ச்சி



பறளாய் ஈஸ்வர விநாயகர், பொன்னாலை வரதராஜப் பெருமாள், மூளாய் சித்திவிநாயகர் ஆகிய கோவில்கள் பற்றிய வரலாற்று நூல் வெளியீட்டின் போது எடுக்கப்பட்ட படம்.

# இவர் கல்வி கற்பித்த பாடசாலைகள்

1. யா/ வட்டு திருஞானசம்பந்த வித்தியாசாலை
2. யா/ சங்கரத்தை சின்னம்மா வித்தியாசாலை
3. யா/ ஸ்ரீ வைத்திலிங்க வித்தியாசாலை
4. யா/ சங்கானை கிழக்கு சிவப்பிரகாச வித்தியாசாலை
5. யா/ சங்கானை மேற்கு சைவப்பிரகாச வித்தியாசாலை
6. யா/ சத்தியம்மன் பெண் பாடசாலை சாவகச்சேரி
7. யா/ திருநெல்வேலி சைவாசிரிய கலாசாலைப்பயிற்சி
8. யா/ பரிசுத்த திருத்துவக் கல்லூரி புசலாவை
9. யா/ ஐ. சங்க சைவ வித்தியாசாலை சுழிபுரம்
10. யா/ ஆறுமுக வித்தியாசாலை சுழிபுரம்
11. யா/ திருவடிநிலை சைவ த. க பாடசாலை சுழிபரம்
12. யா/ மூளாய் அ. மி. த. கலவன் பாடசாலை
13. யா/ அரசினர் விக்ரோறியாக் கல்லூரி சுழிபுரம்
14. யா/ காரை இலகடி சைவ த. கல பாடசாலை
15. யா/ வேம்பொடுகேணி றோ. க. பாடசாலை
16. யா/ காரைநகர் மெய்கண்டான் வித்தியாசாலை
17. யா/ சுழிபுரம் கிழக்கு அ. மி. பாடசாலை
18. யா/ பொன்னாலை வரதராசப் பெருமாள் வித்தியாசாலை சுழிபுரம்

**இருபத்தி மூன்றாவது வயதில் ஆசிரிய சேவையைப் பெற்றார்.**

**சுழிபுரம் மேற்கு பாவனையாளர் சங்கத் தலைவராக 1981ம் ஆண்டு இருந்தார்.**

**சுழிபுரம் மேற்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்க காரியதரிசியாக இருந்தார்**

**சைவ வித்தியாவிருத்திச் சங்க நிர்வாக உறுப்பினராக இருந்தார்.**

**1989ம் ஆண்டு இந்தியா சென்று வேதாரணியம், சிதம்பரம் போன்ற பலதலங்களையும் தரிசித்து மருமகன் பூபாலசிங்கம் (சிறுப்பிட்டி) திருமணத்தை நடாத்தி வைத்தார்.**

## மனைவி புலம்பல்

அன்புடைய நாயகரே உம்மை இன்று
அகிலமதில் இழந்திட்டேன் ஆற்று வேனோ
என்புருகி மனம்பதைத்து இங்கு நானும்
ஏழையாய் அழுதிடற்கு என்செய் தேனோ
பண்புடனே எனைக்காத்துக் கதைகள் கூறிப்
பக்கத்தே செல்லாது வாழ வைத்தீர்
துன்புடனே நானிருந்து வாடு தற்குத்
தூயவரே என்னபிழை செய்தே னையா.

உங்களது உருட்டுகளைக் கண்ட போது
ஓவென்று கதறியழு தாற்று கின்றேன்
மங்களமாய் நாம்வாழ்ந்த நாளை எண்ணி
மனமதுதான் துடிக்கிறது என்ன செய்வேன்
எங்களது பிள்ளைகளின் வாழ்வைக் கண்டு
இன்பமுடன் இருந்தோமே எந்தன் ஐயா
திங்களது இல்லாத வானம் போலச்
செகமீது எமதில்லம் தோன்று தையோ.

## மூத்தமகன் புலம்பல் (பிரலாபம்)

அதி உத்தம பங்களிப்பை என்னால் செய்ய முடியாத பாவியான தனயன் எழுதுவது, எனது உயிரினும் மேலான கடவுளுக்குக் கடவுளான அப்பாவே என் உயிரை அணைத்து வளர்த்த அப்பாவே நீதி, நேர்மை, தருமகுணம் ஈசுரபத்தி உடைய உங்களின் உயிரை எடுத்தது இயமதருமனின் மாயஜாலமோ? தசரதனுக்கு இறுதியில் இராமபிரான் இல்லாதது போல் ஆயிற்று. பஞ்சபாண்டவர்கள் இருந்தும் இறுதிக் கிரியைக்கு பிள்ளைகள் பஞ்சம் வந்துவிட்டதே என கலங் காதீர்கள்.

அப்பா நீங்கள் எம்மைவிட்டுப்பிரிந்த ஏக்கத்தில் அனலி டைப்பட்ட புழுவாய்த் துடிக்கின்றோம். உங்கள் உடலை ஆக்கிரமிக்க அக்கினி தேவனுக்கும் துணிவு இல்லை.

அப்பா நீங்கள் தெய்வத்துள் தெய்வமாகி விட்டீர்கள். நன்மை செய்தும் தீமை சொல்லும் நரக உலகில் இருந்து புண்ணிய உலகம் பறந்து போய்விட்டீர்கள்.

உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்தித்து நாங்களும் நன்னெறி நின்று ஈடேற முயற்சிப்போம் ஆக. எங்கள் கவலைதீர எல்லாம்வல்ல ஈசுர பரஞ்சோதி சித்திவிநாயகர் நல்ல சக்தியைத் தருவார் ஆக.

ஓம் சாந்தி சாந்தி சாந்தி.

## இரண்டாவது மகன் புலம்பல்

பொன் குணரத்தினம் என உங்கள் தந்தையின்
நாமத்தை எனக்கு இட்டு அழைத்தீர்கள்
உங்களுக்கு நான் செய இருந்த கடமைகளை
எனி எப்படி அப்பா செய்வது

நாட்டுப் பிரச்சினையால் உள்நாட்டுக்குள்
எம்மை ஒன்றாய் இருக்க விடாது
நெடுங்காலம் பிரிந்தே இருக்கின்றேன்
பிரிந்தாலும் அடிக்கடி கடிதத்தை பார்ப்போமேயப்பா

அப்பா உங்கள் கவலையை அழுது தீர்க்க
யார்தான் இருக்கினம் என்னருகில்
நானோ என்னம்மா சகோதரர்களுடன்
கதைத்து அழ வெகுநாளாய் துடிக்கின்றேன்

அப்பா என்னை சின்னத்தம்பி வா
என்றழைக்கும் ஓசை இனி
நான் எங்கே கேட்பேன் என்று
எண்ணி என்மனம் அனலாய் வேகுதப்பா

சுழிபுரத்தில் நாம் ஒன்றாய் இருந்து இடம்பெயர்ந்து
கைதடி உசன் சென்றுபின் 1996ம் ஆண்டு மிருசுவிலில்
வண்டியில் உங்களை அனுப்பி வைத்தேன்
வெகு விரைவில் உங்களிடம் வருவேனென்று

அப்பா கலங்காதீர்கள் நீங்கள் இடைவிட்ட
கடமையை செய்ய நான் வருவேன்
அப்பப்பா என்றழைக்கும் ஓசையை ஒலிநாடா
மூலம் கேட்டதுடன் முடிந்து விட்டதே.

## மகன்மார் புலம்பல்

அருந்துஞ் சோற்றுடன் பட்சணம்
பழவகை பாலுடன்
அருந்தேன் றினிதாய் அருங்கலை
கற்க நற்பள்ளியில் பயிலவைத்தீர்
செம்பொரு ளீட்டச் சீருறு
முத்தியோகம் புரியவைத்த
செம்மையை யாரிடஞ் செப்புவம்
அப்பாநின் சித்தத் துடனேநாம்

என்பிழை மக்கட்பிழை பேரக்குழந்தைகள்
பிழைஎல்லாம் பொறுத்து
மன்பதை காக்கும் கடவுளுக்கு
ஒப்பாய் மனம்பொறுத்து
எங்களை வருந்தா தெனமனத்
திடைநீ வேண்டுதல்வேண்டியே
பறாளை விநாயகர் தாள் தனையே
நினைந் தெய்தினையோ.

## பெண்மக்கள் புலம்பல்

அன்பாய் அணைத்து நல்
முத்தங் கொடுத்துச் சிறுவயதில்
பொன்னே மணியே யென்தங்கச்சி
குஞ்சுவா வென் றழைத்திடுவாய்
இன்றே யெமை விட்டேகிய
பான்மை யென் னீர்மையது
சென்றாய் வழியொன்று காட்டாதுன்
வித்தையை யென்று செப்புவமே.

## மருமக்கள் புலம்பல்

மாமாவே எங்களது அருமைத் தந்தாய்
மண்மீது உம்மைப் போல அறிஞருண்டோ
சாவாலே யமனுங்கள் பிரிவைத் தந்து
தவித்திடவே வைத்திட்டான் ஆறுவோமோ
பூமாதின் ஒருநல்ல புதல்வன் நீங்கள்
புகழுடனே இறுதிவரை வாழ்ந்து முன்னீர்
நாமாக உமைவிட்டு நீங்க மாட்டோம்
நல்லவரே மீண்டு மினிக் காண்பதெப்போ.

## சகோதரர் புலம்பல்

ஓர்தாயின் வயிற்றினிலே உதித்தோம் நாங்கள்
ஒற்றுமையாய் அகிலத்தில் வாழ்ந்தோ மன்றோ
பார்மீது எங்கள்குலத் தொழில் தான்
பகரரிய வைத்தியமும் செய்தே வாழ்ந்தோம்
சீர்மேவு மெங்கள் குலப் பெருமை பேசச்
செகத்தினிலே இனிவேறு யார் தானுள்ளார்
பேர்போன வைத்தியனே எங்கள் கோவே
பிறப்போமோ மீண்டுமினி மண்ணின் மீதே.

## கனடாவில் வாழும் மகனின் புலம்பல்

ஹிமாலய ரத்தினம் எனநாமம் சூட்டிய பிதாவே
ஐந்து ரத்தினங்களையும் ஆறுதலுக்கு இரு அம்பிகையும்
பெற்றீரே
ஆறுதல் மொழி பேசாமல் அரைப் பொழுதில் போனீரோ
எங்கே மறந்தீரோ எங்கள் அருமைப்பிதாவே

வடக்குத் திக்கில் நான்காவது மகனின் புலம்பல்
கேட்க எழுவாயே என் அன்புத் தந்தையே
அமரனே என் அழுகைக் குரல் கேட்டதா
எனக்குள் வெதும்பி வெதும்பி அழுகின்றேன்

இனவாத அரசால் இலங்கைப் பிரச்சனையால்
கூட்டுக் குடும்பமாய் யிருக்கக் குலைத்து வைக்க
நான்கு பிள்ளைகளையும் நாலு திக்கில் இருக்க
மூன்று கணப் பொழுதில் முடங்கி விட்டீரோ

இரு சகோதரிகள் அப்பா அப்பா என்றுஅழ
எழுந்து இருக்க முடியவில்லையோ -- அமரனே
முத்துப் பிள்ளையில் செல்வச் சிறப்பான பண்டிதனே
பதினொரு மணியில் புதுவுலகம் பறந்தீரோ.

உப்பு இல்லாவிட்டால்தான் அதனருமை தெரியும்
அப்பன் இல்லாமல் என் அன்புத்தங்கை அழுகின்றார்
எழுந்து வரமாட்டீரோ எங்கள் அன்புப் பிதாவே

ஆறு மனமே அன்புத் தங்கையே
ஆறு மனமே ஆறு ஆண்டவன் -- உன்னை
அப்பாவடிவில் வந்து ஆறுதல் தருவார்
என் அன்புத் தங்கையே

அப்பா அப்பா என்னாசை அப்பாவே
உங்கள் குரல் கேட்க ஒழிவில் நிற்க
என் சிறு பிராயத்தில் ஒழிவு ஒழிவாகி
நான் தொலை தூரம் பறந்திருந்தேனே

தொலை தூரம் பறந்தாலும் பல வடிவில்
பல பலவிதமான கடிதங்கள் புத்திமதியுடனே
பத்தாண்டு (நான் உங்களைக்காணாது) பறந்து
-- போயினையோ

பலபேருக்குப் பரிகாரம் செய்தீரே
பலம் விளங்க வளர்த்த நாய்தானே
இயம வடிவில் வந்து இருக்க விடாமல்
எங்கேயோ போனீர்கள் எங்கள் பிதாவே

என்னாசை அப்பாவே அப்பா
உன்னாசை மொழி கேட்கலாம் என்று இருக்க
என்னாசை மனைவி மழலைகளைக் (காணாது)
எங்கேயோ சென்றாய் எங்களுக்குத் தெரியாமல்

என்னாசைப் படியே எண்ணிய காதலியை
எள்ளளவும் கிள்ளியும் எறியாமல் -- ஏற்று
தங்கள் மருமகளாய்த் திருமகள் எனத்
திருமண லஷ்சுமியாய் என் கையில் தந்தீரே

என் அன்புத் தந்தையே ஏழு ஏழு பிறவி
நான் எடுத்தாலும் உங்களை நான் காண்பேனோ
உன் பேரன்களை உன்மடியில் தூக்காமல்
ஒழிந்து மறைந்தீரா என அருமைப் பிதாவே

என்மகன் தசரத்தினமே ஏன் அழுகின்றாயப்பா
உன் அப்பாவின் அப்பா அரைமணி நேரங்கூடத்
தொலைபேசியில் கூட பேசாமல் ஒழிந்து போனார்
அப்பனே உன் அப்பப்பாவே.

என்னாசை மகள் மஹிலாவே
உனக்கு இரண்டு வயதுவரமுன்
உன் அப்பப்பா அப்பப்பா நீபேசும்
உன் பேச்சுமொழி கேட்காமல் மறைந்தாரே

அல்லும் பகலும் காக்கையின் குஞ்சுபோல்
காத்து வந்த எங்கள் அமரனே
எப்படி ஆறும் எங்கள் மனம்
உங்கள் கதை கதைக்க உள்ளம் பதறுதப்பா
எழுந்து வருவீரோ எங்கள் அமரனே
எங்கள் அன்புத் தந்தையே

சாந்தி சாந்தி சாந்தி

# இளைய மகனின் புலம்பல்

"இந்த இளைய மகனின் புலம்பல் கேட்டு
எழுந்திருக்க மாட்டீரோ உயிர்த் தந்தையே"

**இன வாதம் இலங்கை மண்ணை ஆட்டிப்படைத்திடவே
இளைய தலைமுறை வாழ முடியாத நிலை வந்ததுவே
இளையவன் என்னை ஐரோப்பிய நாட்டிற்கு என்
சகோரரர் அழைத்தனரே**

**தந்தை சொல்லே மந்திரமென இந்திய நாடு வந்தனனே
ஈழ ஏதிலியர் மறுவாழ்வுக் கழகத்தின் மூலம்
அகதி மக்கள் சேவை செய்தனனே**

**உங்கள் சித்தப்படியே சித்த வைத்தியப் பட்டம் பெற்றேனே
காலம் செய்த கோலத்தினால் நாயுருவில் வந்த காலன்
என் தந்தையைக் கடித்தானோ**

**கார்த்திகை பதினைந்தில் தந்தையின் உடல் நிலை
கவலைக் கிடமென அறிந்ததுமே என்னுயிரே
அணைந்தது போல் உணர்ந்தேனே
இலங்கை செல்ல இதயம் துடித்தனனே**

**கார்த்திகை பதினாறில் எந்தையின் பிரிந்த சேதி கேட்டேனே
இதயம் வெந்து துடித்தேனே
ஏழு வருடம் காணாத எந்தையின் முகத்தைக் காண
என் கண்கள் துடித்தனவே.**

**எனது புலம்பலைக் கேட்டு எந்தையை எழுந்திருக்க செய்ய
மாட்டாயோ என் இறைவா வேதாரணியம் உள்ள சிவனே**

**செ. கிருபாரத்தினம்**
**(D. S. M)**
இந்தியா

உ
சிவமயம்

பாராளுமன்ற உறுப்பினரும்
அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரசின்
தலைவருமாகிய
**திரு. அப்பாத்துரை விநாயகமூர்த்தி**
**அவர்களின்**

# இரங்கலுரை

சுழிபுரம் மேற்கை வதிவிடமாகக்கொண்ட ஆயுள் வேத வைத்தியர் குணரத்தினம் செல்வத்துரை அவர்களின் மறைவு என்னை அதிர்ச்சிக்குள்ளாக்கியது. அவர் ஆசிரியராகவும் ஆயுள் வேத வைத்தியராகவும் இருந்து மக்களுக்குப் பல சேவைகளை சேவை மனப்பாங்குடன் செய்திருக்கிறார்.

எமது கட்சியின் ஆரம்பகால உறுப்பினராக இருந்து வந்தவர். எமது கட்சியின் ஆயுட்கால உறுப்பினராகிய அவர் மாபெரும் தலைவர் ஜீ. ஜீ யுடனும் அவருக்குப் பின் அவரது மகன் குமார் பொன்னம்பலத்துடனும் நெருக்கமாக பழகியவர். அவர் குமாரின் குடும்ப நண்பர். அவரின் மறைவு மக்களிற்கும் எமது கட்சிக்கும் பேரிழப்பாகும்.

**அப்பாத்துரை விநாயகமூர்த்தி**
பாராளுமன்ற உறுப்பினர்,
தலைவர்
அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ்.

உ

சிவமயம்

## சைவ வித்தியா விருத்திச் சங்கத் தலைவர்

## பேராசிரியர் அ. சண்முகதாஸ்

அவர்களின்

# இரங்கற் செய்தி

இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் சைவ வித்தியா விருத்திச் சங்கப் பணிமனைக்கு ஒருவர் வந்தார். 'இந்து போர்ட்' இராஜரட்ணத்திலே மிகுந்த ஈடுபாடு கொண்டவர். சைவ வித்தியா விருத்திச் சங்கச் சிறுவர் இல்லத்திலே சிலகாலம் வாழ்ந்தவர். தான் சங்கத்திலே உறுப்பினராக வேண்டும் என்றும், சங்க வளர்ச்சிக்கும் சிறுவர் இல்லப் பராமரிப்புக்கும் தன்னாலான உதவிகளைச் செய்ய வேண்டும் எனவும் கூறினார். இரண்டு ஆண்டு உறுப்புரிமைப் பணத்தைத் தந்துவிட்டுச் சென்றார். அவர்தான் சுழிபுரம் மேற்கைச் சேர்ந்த திரு. கு. செல்வத்துரை.

சங்கக் கூட்டங்களுக்குத் தவறாது சமுகந் தருபவர். தன்னுடைய கருத்தினை எவ்வித ஒளிப்பு மறைப்பு இன்றிக் கூறுவார். கற்றல் - கற்பித்தல், வைத்தியம், தோட்டம் ஆகியவற்றிலே நல்ல அனுபவம் பெற்றவர். தன்னுடைய கல்வியறிவு, பட்டறிவு ஆகியவற்றினடிப்படையில் எங்களுக்கு நல்ல ஆலோசனைகளை வழங்கி வந்துள்ளார்.

எங்கள் சங்கப் பணிப்பாளர் சபைக் கூட்டங்களிலே அவருடைய குரலை இனி நாம் கேட்க முடியாது என்று எண்ணுகின்ற பொழுது மிகவும் கவலையாக உள்ளது. அவருடைய ஆன்மா பார்வதி உடனுறை பரமேசுவரனின் தாழிணையிலே அமைதி பெற்று இன்புற வேண்டுமென இறைவனை வேண்டுகின்றேன்.

பேராசிரியர் ***அ. சண்முகதாஸ்***

உ
சிவமயம்

## பண்டிதை பொன். பாக்கியம்

அவர்களின்

# இரங்கற்பா

# நெஞ்சம் சுடச்சுடச் சென்றாரே

பண்டித மணியின் பேர ரிருவர்
வண்டியில் வந்து வாசலில் நின்றனர்
வாருங்கள் என்றேன் வாட்ட முற்றனர்
ஏதென்று கேட்டேன் இயம்பினர் உடனே
எங்கள் வைத்தியர் செல்லத்துரை மாஸ்டர்

இறைபதம் எய்திய தறியீரோ அக்கா
என்றார் சதாசிவம் இதயம் அதிர்ந்தேன்
முந்தநாள் மோட்டார்ச் சைக்கிளிற் சென்றார்
வந்த தென்ன வகையறி யோமே
மரணம் வருவதை யாரே அறிவார்

காரணம் ஒன்று காட்டிட வேண்டும்
அதுதான் நடந்தது ஆசிரி யர்க்கு
எங்கள் குருமணி பண்டித மணியிடம்
இடையறா அன்பு பூண்டே ஒழுகினார்
அதனாற் கிடைத்த அன்புப் பழக்கம்

விக்ரோறி யாவில் விளங்கும் ஆசிரியப்
பதவியைப் பெற்றுப் பண்புடன் வாழ்ந்தார்
அன்பும் அறிவும் ஆண்மையும் கொண்டவர்
தீமையைக் கண்டாற் சீறி யெழுவார்
எங்கள் பகுதி இயல்புகள் யாவும்

எடுத்தே இயம்பும் ஆற்றல் படைத்தவர்
கோத்திரம் மரபு குடிமக்கள் இயல்பு
யாவையும் எமக்கு வகுத்துச் சொல்வார்
வைத்தியத் துறையில் வான்புகழ் கொண்டவர்
ஆயுள் வேதம் அவருயிர் நாடியாம்

நோயைக் கண்டு நோய்முதல் அறிந்து
சிகிச்சை செய்யும் சீர்மை பெற்றவர்
சிரித்த முகமும் முறுக்கு மீசையும்
சிறந்த நுதலிற் சந்தனத் திலகமும்
மடித்துப் போட்ட உத்த ரீயமும்

இவரது கோலம் எமது கவிஞர்
பாரதி தன்னை எடுத்தே காட்டிட
எங்கள் விக்ரோறியா மாணவர் யாவரும்
பாரதி யாரெனப் பட்டம் வழங்கினர்
தமிழகப் பாரதி நமதிடை வந்தார்

மோட்டார் வாகனத் தேறினா ரென்றால்
உலகம் ஒருமுறை சுற்றி வருவார்
நோயாளர் தமது வீடுகள் சென்று
மருந்து மாத்திரை மனசுக்கு ஆறுதல்
இவர்சொலும் கதைகளால் இதயம் இனிக்கும்

மருந்துக் காகப் பணமும் பெற்றிடார்
இத்தகு பெரியோன் இடையில் இறந்ததால்
மெத்தவும் வருத்தம் உற்றனர் பற்பலர்
நம்பவே மறுத்தனர் நாமென்ன செய்வோம்
நேற்று மருந்துகள் தந்துசென் றாரே

பணமும் பெற்றிலர் பாருங்கள் ஐயோ
என்றே அரற்றி இருந்து புலம்பினர்
அன்பர் நண்பர் ஆவென் றலறினர்
மனைவி மக்கள் மயங்கி வீழ்ந்தனர்
சுடச்சுட அன்றோ சென்றே விட்டார்

நெஞ்சம் சுடச்சுட நெக்குகைக் குருகுநாம்
வஞ்சம் இல்லார் வானுல கெய்தினார்
என்றே பலரும் இசைத்திடக் கேட்டோம்
விதியை வென்றவர் யார்தா னம்மா
எங்கள் மாஸ்ரர் இறைபதம் எய்தி

சாந்தி பெற்றிட நாமும்
பறாளை ஈசர் பாதம் பணிவோம்.

சுழிபுரம் பண்டிதை **பொன் பாக்கியம்**

உ
சிவமயம்

### யாழ். பல்கலைக்கழக முதுநிலை விரிவுரையாளர்

## திரு. நா. செல்வநாயகம் அவர்களின்

# இரங்கற் செய்தி

உள்ளத்தில் உண்மை உளி உண்டானால் வாக்கினிலே ஒளி உண்டாகும். அகத்திலே உண்மை பேணப்படும்போது முகத்திலே ஒளிவீசுகின்றது. செல்லத்துரை மாஸ்ரரின் கண்ணும் ஒளி, அவர் முகமும் ஒளி அவருடைய உடையும் ஒளி. உண்மையில் அவர் கதைக்கும்போதும் நடக்கும்போதும் அவரில் தனித்துவத்தைக் கண்டேன். அவர் ஒரு பெருந்தகையாளர் என்பதை அவர் தன் நடைஉடை பாவனைகளால் வெளிப்படுத்தியவர். சுழிபுரத்துப் பாரதியாரான மாஸ்டர் "ஊக்கமது கைவிடேல்" எனும் ஔவை மூதாட்டியின் வாக்கிற்கிணங்க எந்நேரமும் முயற்சி செய்து கொண்டே இருப்பார். அவர் ஆசிரியராக மட்டுமன்றிச் சிறந்த வைத்தியராகவும் சேவை ஆற்றியவர்.

தமிழ்ப் பேரறிஞரான இலக்கிய கலாநிதி பண்டிதமணி கணபதிப்பிள்ளைக்கு இவர் வைத்திய சேவையாற்றிச் சிறந்த வைத்தியர் எனப் பாராட்டுப் பெற்றவர். அவருடைய பேரன் சதாசிவத்தின் மனைவிக்கு செல்லத்துரை மாஸ்டர் என்றாலே கடவுள். இவரின் சித்த வைத்திய அறிவு தமிழ்ப் பேரறிஞர்களையும் இவர்பாற் கவரச்செய்தது.

"நோய் நாடி நோய் முதல்நாடி அதன்
வாய் நாடி வாய்ப்பச்செயல் என்ற"

என்ற வள்ளுவப் பெருந்தகையின் வாக்கிற்கிணங்க கைநாடியிற் சிறந்த தேர்ச்சியுடைய அவர் நோயை அறிவதில் நிபுணத்துவமுடையராய் அதற்கான பரிகாரங்களைச் செய்வதில் ஆளுமையுடையவராய் விளங்கினார். ஏழைமக்களிடம் பணத்தை ஒருபோதும் அவர் எதிர்பார்த்ததில்லை. அவர்கள் குணமடைய வேண்டுமென்ற நோக்கிலேயே சேவை புரிந்தவர். தன்நிலத்தான் ஆண்ட பெரிய சித்தரின் பீட்டப் பிள்ளையானமையால் இவரின் வைத்திய அறிவு, ஆளுமை என்பன சிறப்படைந்திருந்தன. மேலும் இவருடைய தமிழறிவும் பாராட்டத்தக்கதாகும். கம்பன் வீட்டுக்

கட்டுத்தறியும் கவிபாடும். பண்டிதமணியின் சகவாசத்தால் இவருடைய தமிழ்ப் புலமையும் சிறந்து வளர்ந்தது. சைவவித்தியா விருத்திச் சங்க இயக்குநர்களில் ஒருவராக விளங்கியவர் அமரர். இயக்குநர் சபைக்கூட்டங்களுக்கு ஒழுங்காக வருகை தந்து அதன் பணி வளர அவ்வப்போது சிறந்த கருத்துக்களைக் கூறியுள்ளார்.

மல்லாகம் பூதவுடையார் கதிர்காமவுடையார் வழியிற் தோன்றிய திருவாளர் மயில்வாகனம் வள்ளிப்பிள்ளையின் அருந்தவப் புதல்வி பொன்னம்மையெனும் பதிதாண்டாப் பண்புடை மனைவியைப் பெற்று இல்லற வாழ்வில் இன்பம் கண்டவர்.

"பெறுமவற்றுள் யாமறிவதில்லை அறிவறிந்த
மக்கட் பேறல்ல பிற."

என்ற பொய்யா மொழிக்கிணங்க சிறந்த நல்லொழுக்கம் நற்பண்புகளைக் கொண்ட மக்கட் செல்வங்களைப் பெற்று வளமான வாழ்வைப் பிறர் பார்த்து மெச்சகத்தக்க வாழ்வைக் கொண்ட அமரரைக் காலம் பறித்தது. வாழ்க்கையின் ரகசியம் முழுமையும் நம் சிற்றறிவுக்கு அப்பாற் பட்டது. அவரின் பிரிவு நமக்கெல்லாம் அதிர்ச்சியைத் தந்தது. எல்லாம் வல்ல மேலான கருணைப் பொருளாகிய சிவபரம் பொருள் அவரின் ஆத்மாவை ரட்சிக்க வேண்டுகின்றேன்.

**நா. செல்வநாயகம்**
தலைவர் / நுண்கலை
முதுநிலை விரிவுரையாளர்
(இந்து நாகரிகம்)
யாழ். பல்கலைக்கழகம்

உ
சிவமயம்

ஆசிரிய ஆலோசகர்

## திருமதி சகலகலாவல்லி சந்திரராசா

அவர்களின்

# இரங்கற் செய்தி

## என் நினைவில் நீங்கா நிறைமனிதர்

நான் மட்டக்களப்பில் ஆசிரியத் தொழிலில் ஈடுபட்டு இரு வருடங்களின் பின் எனது ஊர்ப்பாடசாலைக்கு மாற்றம் பெற்று வந்தேன். அப்பொழுது எங்கள் பாடசாலையின் அதிபராகப் பணியாற்றியவர் மறைந்த எங்கள் அதிபர் அவர்களே. குடும்ப நிலை காரணமாக ஆசிரியப் பயிற்சி பெறாது தராதரப் பத்திரமற்ற ஆசிரியராகவே இருந்துவிடலாம் என்ற நோக்கில் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையிற் பயிற்சி பெறுவதற்கான விண்ணப்பத்தை அனுப்பாமல் விட்டுவிட்டேன். ஆசிரியர் பயிற்சிக்கான நேர்முகத்தேர்வு பற்றிப் பத்திரிகையில் பார்வையிட்ட அதிபர் அவர்கள் உங்களுக்கு நேர்முகப் பரீட்சைக் கடிதம் வரவில்லையா? என்று கேட்டார். நான் வீட்டு நிலைமை காரணமாக கலாசாலைக்குப் போகமுடியாது, அதனால் விண்ணப்பம் அனுப்பவில்லை எனக் கூறினேன். உடனே அதிபர் அவர்கள் ஆசிரியப் பயிற்சி பெற்று தராதரப்பத்திரம் பெற்றால்தான் முழுமையான ஆசிரியராக விளங்கலாம். தொழிலில் மேன்மையடையலாம். கட்டாயம் நீங்கள் போக வேண்டும் விண்ணப்பம் அனுப்பாவிட்டாலும் நேர்முகப்பரீட்சைக்குச் சென்று கலாசாலை அனுமதி பெறவேண்டும் எனக்கூறி அடுத்தநாள் நடைபெறவிருக்கும் நேர்முகத் தேர்விற்கான சகல ஆயத்தங்களையும் தானே செய்து நேர்முகத்தேர்வு அன்று கலாசாலைக்கு வந்து தேர்வுக்குழுவில் இருந்த விரிவுரையாளருடன் விண்ணப்பம் அனுப்பமுடியாமையைக் குறிப்பிட்டுப் பயிற்சிக் கலாசாலை அனுமதி பெற்றுத் தந்தார். இன்று நான் ஒரு பயிற்றப்பட்ட ஆசிரியராகவும் சேவைக்கால ஆசிரிய ஆலோசகராகவும் விளங்கக்காரணமாக இருந்து மறைந்த அதிபர் அவர்கள் என் நினைவில் நீங்கா நிறைமனிதராக விளங்குகிறார்.

உறுதியான உடலும் உறுதியான உள்ளமும் கொண்ட அதிபர் அவர்கள் சிறந்த வைத்தியர். அவருடைய வைத்தி

யத்தாலும் பலனடைந்தமையை மறக்க முடியாது. பாடசாலைச் சேவையில் அவர் ஆற்றிய பணிகளில் விளையாட்டு நிகழ்வுகள் கலை நிகழ்ச்சிகள் மிக முக்கியமானவை.

"இந்தச் சரீரம் நமக்குக் கிடைத்தது நாம்
கடவுளை வணங்கி முத்தியின்பம் பெறும் பொருட்டேயாம்"

என்ற நாவலர் வாசகத்தைப் பாடசாலையில் ஒவ்வொரு நாளும் ஓத வைத்து நாவலர் பணியை மாணவர்களுக்கு எளிமையாக விளங்க வைப்பார். பாரதியார் போன்ற தோற்றமுடைய அதிபர் அவர்களைப் பாரதியார் வாத்தியார் என்றும் அழைப்பார்கள். எடுத்த காரியத்தை முடித்து வைப்பதற்கு விடாமற் செயற்படுவார். தமிழையும் சைவத்தையும் வளர்ப்பதில் மிக ஆர்வமுடையவர். நல்லதைச் செய்யும் நல்ல மனிதரை வெகு விரைவில் காலன் கவர்ந்துவிட்டான். அவரது இழப்பு ஈடுசெய்ய முடியாததே.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல பொன்னாலை விநாயகரையும் நாராயணப் பெருமாளையும் வேண்டி இறைஞ்சுகின்றேன்.

**திருமதி சகலகலாவல்லி சந்திரராசா**
ஆசிரிய ஆலோசகர் (ஆரம்பக்கல்வி)
(பொன்னாலை)

உ
சிவமயம்

வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி அதிபர்
**திரு. ச. இராமலிங்கம் அவர்களின்**

# இரங்கற் செய்தி

## ஒளிச்சுடர் மறைந்தது

"தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று"

என்ற வள்ளுவர் வாய்மொழிக்கேற்ப வாழ்ந்த டாக்டர் குணரத்தினம் செல்வத்துரை ஓய்வு பெற்ற அதிபர் இன்று மௌனமாகிவிட்டார். அவர் குரல் ஓய்ந்து விட்டது. மாசற்ற திருவுருவாய் உயிர்காக்கும் உத்தமராய் வாழ்ந்துவிட்ட ஒளிச்சுடர் ஒன்று அணைந்துவிட்ட செய்தி எனக்கு அதிர்ச்சியையும், வேதனையையும் தந்துவிட்டது. பிறந்தவர் ஒருநாள் இறப்பது திண்ணம். ஆறிலும் சாவு, நூறிலும் சாவு என்பதை அறிந்திருந்தாலும் இரக்கமற்ற காலன் நாய் மூலம் அவர் உயிரைப் பறித்து விட்டான் என்பதை நினைக்க உள்ளம் பதறுகின்றது. என்செய்வது விதி செய்த சதிதான்.

வகுத்தான் வகுத்த வகையல்லால் கோடி
தொகுத்தார்க்கும் துய்த்தல் அரிது

என்பதற்கிணங்க அவர் பெற்றுள்ள செல்வம் அனுபவிக்கும் காலம் இவ்வளவு தான் என விதி நியமித்துவிட்டது. உண்மை, இனிமை, ஊக்கம், கடமையுணர்வு, திறமை யாவும் ஒருங்கே அமையப் பெற்றுள்ள உத்தமர் அவர். அன்பின் திரு உருவம். பண்பின் உறைவிடம். நிலையற்ற வாழ்க்கை நீர்மேல் எழுத்து. ஆனால் அவர் நினைவுகள் என்றும் கல்மேல் எழுத்து. அவர் பூதஉடல் அழிந்தாலும் புகழுடம்பு அழியாது. அவரது பிரிவையெண்ணி நான் அல்லலுறுகின்றேன். அவர் ஆத்மா சாந்தி யடைவதாக.

**ச. இராமலிங்கம்**
அதிபர்

உ

சுழிபுரம் ஈசுரவிநாயகர் தேவஸ்தான பூசகர்

**சோழியூரான் பிறைசூடிக்குரு**

அவர்களின்

# இரங்கற் செய்தி

## ஈசுர விநாயகரில் மிகுந்த பக்தி கொண்டவர்

சுழிபுரம் பறாளாயில் பள்ளி கொண்டுள்ள ஈசுர விநாயகரிடம் மிகுந்த பக்தி கொண்டவர் அமரர் குணரட்ணம் செல்லத்துரை அவர்கள். அன்னாரின் குடும்பத்தவர்கள் அன்று தொட்டு ஈசுர விநாயகரை தமது குலதெய்வமாக வணங்கியதன் பலனாக அமரர் கல்விச் செல்வத்தையும், அதனால் உத்தியோகச் சிறப்பையும், நல்ல மனையாளோடு மக்கட் செல்வத்தையும், இன்னும் பொருட் செல்வத்தையும் பெற்று பெருமகிழ்வோடு வாழ்ந்தார். அத்துடன் சமூகத்தில் நல்லதோர் ஆசானாகத் திகழ்ந்தார். இவர் ஆசிரிய ராகப் பணிபுரியும் காலத்தில் சிறுவர்கள் இவரைத் "தொங்கல் வாத்தியார்" என்று பெருமையாக அழைப்பார்கள். இதற்குக் காரணம் இவரது உடையின் சிறப்பாகும். அத்துடன் எப்போதும் புன்முறுவலுடன் காணப்படுவார்.

அன்னார் பறாளாய் ஈசுரவிநாயகர், பொன்னாலை வரதராஜப் பெருமாள், மூளாய் சித்தி விநாயகர் போன்ற கோவில்களின் வரலாறுகளைத் தொகுத்து புத்தகமாக எழுதி வெளியிட்டார். இதன் மூலம் தமது சமயப்பற்றை வெளிப்படுத்தினார்.

ஈசுர விநாயகரின் வருடாந்த மகோற்சவ தேர்த்திருவிழா அன்று வசந்த மண்டப இளைப்பாற்று பூசை உபயத்தை மிகவும் சிறப்பாகச் செய்து வந்துள்ளார்.

இவரது மறைவு எவரும் எதிர்பாராத ஒன்று மட்டுமல்ல, வாழ்வின் நிலையாமையையும் எமக்கு உணர்த்திவிட்டது. அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தவர்க்கு எமது ஆழ்ந்த அநுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய சர்வ வல்லமை பொருந்திய ஈசுர விநாயகரின் திருப் பாதங்களைப் பணிகின்றேன்.

சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

சுழிபுரம் ஈசுரவிநாயகர் தேவஸ்தானம்
ஆலய பூசகர்
**சோழியூரான் பிறைசூடிக்குரு**

உ

வட்டுக்கோட்டை திருமறை மன்றத் தலைவர்

## திரு. சி. மருதபிள்ளை அவர்களின்

# இரங்கற் செய்தி

## சைவவித்தியா விருத்திச் சங்கம் பெற்ற இரணைப்பிள்ளைகள்

அமரர் அதிபர், வைத்தியர் கு. செல்வத்துரை அவர்கள் சைவசமயத்திற்கும் செந்தமிழுக்கும் சமூகத்திற்கும் அளப்பரிய தொண்டாற்றிய பெரியார் ஆவார். மனித உள்ளத்தை வளமாக்கும் ஆசிரியத் தொழிலை மேற்கொண்டார். உடம்பை வளமாக்கும் வைத்தியத்தொழிலை நன்காற்றினார் இரண்டுக்கும் மேலாக நம்சமூகத்திற்கு பெரும் பணியாற்றினார்.

சைவவித்தியா விருத்திச்சங்கம் பெற்ற இரணைப் பிள்ளைகள் நாங்கள் இருவரும் சகோதர பாசத்தோடு பழகினோம். அவர் என்னை மூத்தசகோதரனாக மதித்தார். நான் அவரை இளைய சகோதரனாக மதித்தேன்.

"மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம்"

என்னும் திருஞானசம்பந்தர் செந்தமிழைப் பேணினார்.

"நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம்
இன்பமே எந்நாளும்"

என்னும் திருநாவுக்கரசர் திருவாய் மொழிப்படி வாழ்ந்தார். மக்களை வாழவைக்கும் தொழிலே ஆசிரியத்தொழில். ஆசிரியர் தம் செயற்பாட்டின் வண்ணம் அரசர் ஆகிறார். அவ்வாறு அவர் ஒரு அரசனாக விளங்கினார். என்தம்பி ஓர் அரசனாக பவனிவருவதைப் பார்த்து அகம் மகிழ்ந்தேன். பேரானந்தம் பெற்றேன். சைவ வித்தியா சங்கத்தின் அசையாத தூணாக, மேலும் ஒரு கோட்டையாக இருந்தார். அவரும் நானும் வட்டுக்கோட்டை திருஞானசம்பந்த வித்தியாலயத்தில் சேவை செய்யும் சந்தர்ப்பம் கிடைத்தது. நாம் இருவரும் இணைந்து வித்தியாலயப் பணிகளை மிகவும் மேம்பாடாகச் செய்தோம். முத்தமிழ் முழங்கிய காலம் பல நாடகங்களை மேடை ஏற்றினோம். நவராத்திரிகாலம் வித்தியாலயம் கலைக் கோலம்

கொள்ளும். பெற்றார், ஆசிரியர், மாணவர் ஆகிய முத்திறத்தினரும் சேர்ந்து உழைத்தோம். வலிகாமம் மேற்கு ஆசிரியர் சங்கம் பலவிதமான போட்டிகளை நடாத்தியது. அவற்றில் எல்லாம் எமது மாணவர் பங்கு கொண்டு பல வெற்றி விருதுகளைப் பெற்றனர். அதனால் திருஞானசம்பந்த வித்தியாலயம் வலிமேற்குப் பிரதேசத்தில் முதலாம் இடத்தைப் பெற்றது. நால்வர் பெருமக்களுக்கு பெருவிழா எடுத்தோம். சைவத்தின் பெருமையை மாணவர் நன்கு அறிந்து உணர்ந்து ஒழுகினர். முதியவர்களும் சைவசமயத்தின் பெருமையை அறிந்து மதமாற்றம் என்ற சூறாவளிக்காற்றின் நின்றும் தப்பினர்.

நாவலர் பெருமான் காட்டிய நல்வழியில் நின்று புராணபடனத்தை வளர்த்தோம். குரு பூசைக் காலத்தில் பண்ணிசையும் புராணபடனமும் சிறப்பாக நடைபெறும்.

அவர் புராணத்தை வாசிப்பதும் நான் பயன் சொல்வதும் நடைபெறும். கேட்போர் கூட்டம் திரண்டிருக்கும். இவ்வாறு நாம் இருவரும் சைவத்தையும் தமிழையும் வளர்த்தோம்.

அவர் என்னிலும் ஒருபடி உயர்ந்து விட்டார். அவருடைய பரம்பரைத் தொழிலாகிய வைத்தியத் தொழிலினால் பெரும் புகழ் பெற்றார்.

"தோன்றிற் புகழொடு தோன்றுக"

என்னும் திருவள்ளுவர் மொழிக்கு இலக்கியமாக விளங்கினார். பிறப்பும் இறப்பும் வாழ்க்கையின் இரு துருவங்கள். இறைவன் அன்பனைத் தன் திருவடியில் சேர்த்துக் கொண்டார். ஆன்மா சாந்தியடையப் பிரார்த்தனை செய்கின்றேன். அவரது பிரிவால் வருந்தும் மனைவி, மக்கள் மருமக்கள், பேரப் பிள்ளைகள் உற்றார் உறவினர் நண்பர் அனைவருக்கும் ஆறுதல் கூறுகின்றேன்.

"நெருநல் உளன் ஒருவன் இன்றில்லை
என்னும் பெருமை உடைத்திவ் வுலகு"

என்றார் திருவள்ளுவர்.

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக
உலகம் எல்லாம்."

***சி. மருதபிள்ளை***

தலைவர், திருமறை மன்றம்
வட்டுக்கோட்டை.

உ

## சைவ வித்தியா விருத்திச் சங்கத்தினரின்

# இரங்கற் செய்தி

சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் இயக்குநர் சபை கடந்த 25-11-2000இல் கூடிய பொழுது தங்கள் கணவரின் மறைவுக்கு ஓர் அனுதாபத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

தீர்மானத்தை முன்மொழிந்து பேசிய தலைவர் பேராசிரியர் அ. சண்முகதாஸ், அமரர் செல்வத்துரையின் தொண்டுள்ளத்தையும் கடமையுணர்ச்சியையும் பெரிதும் பாராட்டினார். இந்து போட் இராசரத்தினத்தின் இலட்சியங்களை நெகிழவிடாது பின்பற்றுவதில் அவருக்கிருந்த ஆர்வம் பற்றியும் அங்கு நன்றியுடன் குறிப்பிடப்பட்டது.

இத்தகவலைத் தங்களுக்குத் தருவதுடன் தங்களுக்கும் தங்கள் பிள்ளைகளுக்கும் என் அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**சோ. பத்மநாதன்**
செயலாளர்.

உ

சங்கீத பூஷணம்

பிரதிக்கல்விப் பணிப்பாளர்

**திரு. சு. கணபதிப்பிள்ளை அவர்களின்**

# இரங்கற் செய்தி

## நினைவில் நீங்காதவர்

சைவப் பெரியார் சுதேச வைத்தியர், அதிபர் ஆகிய தகுதிகளையுடைய உத்தம ஒழுக்கசீலர் எல்லோராலும் நன்கு மதிக்கப் பட்டவர் மறைந்த மாமேதை திருமிகு கு. செல்வத்துரை அவர்கள்.

எனது பிறந்த ஊரான நெல்லியான் கிராமத்திலிருந்து கிழக்குத்திசையில் புதறான், ஆலமேடை வயல்வெளியை அடுத்து வரும் சுழிபுரம் மேற்குப் பகுதியில் முதல் வீடாக அமைந்துள்ளது இவர் வசிக்கும் இடமாகும்.

இங்கு பல தொழில்களைப் புரியும் மக்கள் வாழ்கின்றனர். கல்வியறிவு, இறைபக்தி, ஒழுக்கசீலம், பிறரை மதித்தல் போன்ற நற்பண்புகள் மிக்க மக்கள் வாழ்ந்து வரும் பெரிய கிராமமாம் சுழிபுரத்தில் வாழ்வாங்கு வாழ்ந்தவர் அமரர் அதிபர் செல்வத்துரை அவர்கள்.

இவர் பொன்னாலை வரதராஜப் பெருமாள் வித்தியா சாலையில் அதிபராகவிருந்து ஆற்றிய சேவை அளப்பரியது. மாணவர்களுக்குக் கல்வியறிவை ஊட்டியதுடன் பல்துறை ஆற்றல்களையும் வளர்த்தார். வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டியைச் சிறிய மைதானத்தில் பெரியதாக ஆரம்பித்துச் சாதனை படைத்தார். பரிசளிப்பு, கலைவிழா போன்ற செயற்பாடுகளில் மாணவர்களை ஈடுபடுத்திப் பெற்றோர், பழையமாணவர், கல்வியதிகாரிகள் ஆகியோரை ஒன்றுகூடச்செய்து சமூக மேம்பாட்டை உருவாக்கினார். இவற்றை மக்கள் என்றும் நீங்காத நினைவில் வைத்திருப்பர் என்பது உறுதி.

இளைப்பாறிய காலத்திலும் மிகுந்த உற்சாகத்துடன் தனது பாரம்பரியத் தொழிலான சுதேச வைத்தியத்தை ஓயாது உறங்காது திறம்படச்செய்து மக்களைப் பிணியணுகாது பாதுகாத்த பெருமைக்குரியவரானார். இவர் திடீரென இவ்வுலக வாழ்வை நீத்து இறைவனடி சேர்ந்த செய்தி எம்மை அதிர்ச்சியிலும் ஆச்சரியத்திலும் ஆழ்த்திவிட்டது. இதனையே வள்ளுவர் பெருந்தகை நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும் பெருமையுடைத்திவ்வுலகு எனக்கூறி எமக்கு அறிவையும் தேறுதலையும் தந்துள்ளார்.

இவர் பிரிவால் தாங்கொணாத்துயரில் ஆழ்ந்திருக்கும் குடும்பத்தினரின் துன்ப துயரத்திற்கு ஆறுதல் கூறி, ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திப்போமாக.

சங்கீத பூஷணம்
**சு. கணபதிப்பிள்ளை**
பிரதிக் கல்விப்பணிப்பாளர்



உ

சுழிபுரம் பிரசங்க பூஷணம்

**திரு. நடேசன் சிவசண்முகமூர்த்தி** B. A Dip in Ed.

(ஆசிரிய ஆலோசகர், வலிகாமம் கல்வி வலயம்)

அவர்களின்

# இரங்கற் செய்தி

சுழிபுரம் பெரியபரியாரியார் எனப் புகழ்பூத்த இராஜ வைத்தியர் குடும்பத்தில் தோன்றி சிறந்த ஆயுர்வேத வைத்திய ராகவும் நல்ல ஆசிரியப் பெருந்தகையாகவும் சிறப்புறு அதிபராகவும் புகழ்பூத்த பெருமகனார் அமரத்துவம் பெற்ற குணரத்தினம் செல்வத்துரையாவார். அன்னாரின் அமுத மொழியால் அன்பர்கள் பலரையும், நண்பர்களாக அதிகமான வரையும் அன்பால் தம்வசம் கவர்ந்தவர்.

எடுப்பான தோற்றம், வெண்ணீற்று நுதல், தண்ணொளிப் பார்வை, வேட்டி சட்டையுடன் அழகுசெய்யும் உத்தரியம், இவை யெலாம் மகாகவி பாரதியாரை எம்மனக்கண்முன் காட்டுவது போன்ற பொலிவு. இதனால் அன்பர் செல்வத்துரை அவர்களையே ஈழத்துப் பாரதியார் எனச் செல்லமாக அன்பர்கள் அழைப்பார்கள். பாரதிபோன்று கவித்துவம், தனித்துவம் பெற்று விளங்குவதோடு மருத்துவத் துறையிலும் மேம்பாடுடையவர்.

ஆயிரமாயிரம் அன்பர்களையும் நண்பர்களையும் கொண்டி லங்கிய அதிபர் செல்வத்துரை அவர்கள் என்னோடும் அரை நூற்றாண்டாகப் பழகியவர். திறந்த மனத்தோடு எதையும் துணிந்து சொல்வார். இத்தகைய இனிய அன்பன் இன்றிலையே எனும்பொழுது யாவருக்கும் கவலையே! அவரது திடீர்மரணம் உள்ளத்தை நெகிழ வைக்கின்றது. என்சொல்வது? எல்லாம் விதிப்பயனே! அன்னாரைப் பிரிந்திருக்கும் குடும்பத்தினர், நண்பர்கள், அன்பர்கள் அனைவரும் துக்கத்தை மறந்து அமைதியும் ஆறுதலும் கொள்வதே சாலச்சிறந்தது. அமரத்துவம் பெற்ற அன்பர் செல்வத்துரை அவர்களது ஆத்மா சாந்திபெற எல்லாம் வல்ல எனது குலதெய்வமாகிய பறாளை முருகனை வணங்குகின்றேன்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**நடேசன் சிவசண்முகமூர்த்தி**

# Dr. செ. வேலாயுதபிள்ளை

அவர்களின்

# இரங்கற் செய்தி

சுழிபுரம் புகழ்பெற்ற உயர் குடும்பத்தில் சித்தராயர் வழித் தோன்றலில் குணரத்தினம் முத்துப்பிள்ளை தம்பதிகட்கு செல்வத்துரை செல்வ மகனாகப் பிறந்தார். தொட்டிலிலேயே சீர் வரிசையில் வளர்ந்து வந்த இவர் பாரம்பரிய சித்த வைத்தியத்தையும், இந்து போட் ஆசிரியராகவும், பின் அரச ஆசிரியராகவும் தனது வாழ்க்கையை ஆரம்பித்தார்.

அன்னாருக்கு இறைவன் அருளிய பாரதியார் போன்ற அழகிய தோற்றம், நடை உடை அரச கம்பீர தோற்றத்தையும் இளமை தொடக்கம் இறுதிவரை பேணிப்பாதுகாத்து வந்தார். புதுமையான அவரின் தோற்றம் ஒரு முறை பார்த்தால் பின்பு மறக்கவே முடியாத அளவிற்கு அற்புதமானது. அவரின் அந்த சிறப்புத் தோற்றம் அவரது வாழ்க்கையையும் உயர்ச்சியாகவே அமைய வழி செய்தது. தோற்றத்தில் அவர் பாரதியாரே. வாழ்வில் வைத்தியர், வாத்தியார், பரியாரியார், ஏழுமலை, பாரதியார் என்ற சிறப்பு பெயர்களைப் பெற்றுக் கொண்டார்.

மல்லாகம் வங்களா ஒழுங்கை வாரியார் வங்களா வழவில் பாரம்பரிய பெருமையுடன் கதிர்காம உடையார் வழியில் உதித்த மயில்வாகனம் வள்ளிப்பிள்ளையினதும் புதல்வியாகிய பொன்னம்மாவை தனக்கு ஒப்பான மனைவியாக அமைத்தமை அவர் வாழ்வுக்கு மேலும் பெருமை தேடிக் கொடுத்தது.

மக்கள் சேவையை தனது வாழ்வில் தொழில் முறையாக சிறப்பாக புரிந்த இவர், பல பொது விடயங்களிலும் தமிழ், சமய, அரசியலிலும் ஈடுபட்டார். தனது உறவினர்களையும் தனது சொந்தக்காரர்களாக

கவனித்து எல்லா கொண்டாட்டங்களிலும் பங்கேற்று உற்சாகப்படுத்தி வந்தார். பாரம்பரியத்தை பாதுகாப்பதே முதற்கடமை என எதிலும் முன்நிற்பார்.

அவர் செய்த நற்பணியால் அவர் பிள்ளைகள் சீரும் சிறப்புமாக வாழ்கின்றனர். எனது மாமனார்களாகிய அப்பாப்பிள்ளை மாஸ்ரர் (கந்தையா) றிஜிஸ்ரார் (பதிவாளர்), சின்னையா குடும்பத்துடன் ஒன்றாகப் பழகி எம்மில் ஒருவராக பழகியவர். எனக்கும் சிறுபிராயம் தொடக்கம் மாமியை மணம் முடித்த காலம் தொட்டு பின்பு நான் மணம் முடித்த பின்பும் மிகவும் உதவியாக இருந்தவர். எங்கள் பிரதேசத்தின் பெருமலையே சரிந்துவிட்டது.

அவர் கடைப்பிடித்த உயரிய பண்புகளை கடைப்பித்து, ஈடு செய்வது மிகவும் சிரமமான விடயம். அது அவருக்கு மட்டுமே உரியது. எனினும் அவரின் சிறப்பியல்புகளை பேணிப்பாதுகாக்க முயற்சிப்போமாக. அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்போமாக.

பதிவாளர் வளவு
சுழிபுரம்

**Dr. செ. வேலாயுதபிள்ளை**
**திருமதி வே. செந்திரு**

## திருமதி கோமளா வேதநாயகம்

அவர்களின்

# இரங்கற் செய்தி

## கண்டதும் கேட்டதும்

அமரர் திரு. செல்வத்துரை ஆசிரியர் அவர்களை நான் சிறுபராயம் முதல் நன்கு அறிவேன். முதன் முதலாக இவரைப் பார்த்த போது மகாகவி சுப்பிரமணிய பாதரதியாரின் தோற்றத்தையே பிரதிபலிப்பதாக இருந்தார். அவரது முகத்தோற்றம், மீசை, உடை, நடை என்பன எல்லாம் அசல் மகாகவியைப் போலவே இருந்ததால் ஊரில் அவரை ஒரு பாரதியார் என்று அழைப்பது வழக்கம்.

"அகத்தின் அழகு முகத்தில் தெரியும்" என்னும் பழமொழிக் கேற்ப என்றும் அவர் சிரித்த, பூரித்த முகத்துடன் காட்சி அளிப்பார்.

இவரது பரம்பரையினர் சித்தவைத்திய ஆயுள்வேத முறையில் தேர்ச்சி பெற்றும், நிபுணத்துவம் பெற்றும் இருந்தனர். ஆகவே இவரிடமும் இயற்கையாக வைத்தியக்கலை இருந்ததை யாவரும் அறிவர்.

அதுமாத்திரம் இன்றி இவர் தனது திறமையையும் ஆற்றலையும் வெளிக் கொணர்வதற்காக ஞானக்கலையில் இறங்கினார். இன்னும் சொல்லப் போனால் ஆசிரியர் கலையிலும் வல்லவராகத் திகழ்ந்தார்.

ஈழநாட்டில் சைவமும் வைஷ்ணமும் தழைத்தோங்கிய ஊர்தான் சுழிபுரம். அதற்கு வரலாற்றுச்சான்றாக அமைந்த கோயில்கள்.

1. சுழிபுரம் விநாயகர் ஆலயம்
2. பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமாள் ஆலயம்
   ஆகியவை ஆகும்.

இவ்விரண்டு கோயில்களையும், இதர பல தமிழ் மக்களின் வாழ்வை மையமாகவும், வரலாற்றுச் சான்றுகளையும் ஆராய்ச்சி செய்து யாரும் கூறாத பல அபூர்வமான பல கருத்துக்களை ஆசிரியர் அவர்கள் சிறுபுத்தகமாக எமக்குத் தந்துள்ளார்.

இப்புத்தகம் பாரம்பரிய வரலாற்றுச்சான்றுகளை எமது வருங்காலச் சந்ததியினர் கற்று உணரும் ஒரு சிறந்த கைநூல் என்றே கூறலாம்.

அன்னாரின் இழப்பு எவ்வகையிலும் ஈடுசெய்ய முடியாத ஒன்றாகும். அன்னாரின் மறைவை இட்டு நாமும் கவலைக்கடலில் மூழ்குகின்றோம்.

பிரிவுத்துயரால் வாடும் அவர் குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறி அவரின் ஆத்மா சாந்தியுற இறைவனை வேண்டுகிறோம்.

கவிஞர் கண்ணதாசன் சொன்னார்

"சொர்க்கமோ, நரகமோ, முத்தியோ எதுவோ நான் கவலைப்படப் போவதில்லை. ஏனெனில் எல்லா இடமும் அவரே நீக்கமற நிறைந்துள்ளார்."

எங்கு போனாலும் ஸ்ரீ கிருஷ்ணனே துணை

வணக்கம்

**திருமதி கோமளா வேதநாயகம்**
(லண்டன்)

உ

பொன்னாலை
வரதராசப் பெருமான் வித்தியாசாலை
அதிபர்

# திரு. பு. ஸ்ரீவிக்னேஸ்வரன் அவர்களின்

# இரங்கற் செய்தி

மனித பிரபஞ்சம் குறுகியதாகவோ அல்லது நீண்டதாகவோ இருக்கலாம். பிரபஞ்சத்தை அறிந்து புரிந்து வாழ்கின்ற மனித ஜனங்கள் தங்கள் மரணத்திற்குப் பின்னாலும் மனித நேயங்களால் மறக்க முடியாத மகத்தான பணிகளையும், பண்பு களையும் விட்டுச் செல்கின்றனர். இத்தகைய சிறப்புமிக்க ஆத் மாக்களில் ஒருவர்தான் எங்கள் மதிப்புக்குரிய அதிபர் கு. செல்வத்துரை அவர்கள்.

நிமிர்ந்த தோற்றம், அழகான தலைப்பாகை, நெற்றியில் வீபூதி, நேரிய பார்வை, முறுக்கு மீசை, நிதானமான சிந்தனை, அஞ்சாத பேச்சு, கை கூப்பி வரவேற்கும் பண்பு, பிறருக்கு உதவிடும் நல்மனம் இவை இவருடன் கூடப்பிறந்தவை.

கல்விப்பணியிலும், வைத்தியச் சேவையிலும் தன்னை முழுமையாக அர்ப்பணித்து மக்களுக்கு நற்பணியாற்றி முதன்மையாக வாழ்ந்தவர். வாழ்ந்து காட்டியவர். எமது வித்தியா சாலை மாணவர் நன்மை கருதி விளையாட்டு மைதானத்தை புனரமைத்து இல்ல மெய்வன்மைப் போட்டியை சிறப்பாக நடாத்திய பெருமைக்குரியவர். வித்தியாசாலையின் வளர்ச்சிக்கு உழைத்த இவரின் பிரிவுபசார விழா எமது வித்தியாசாலையில் மிக எழுச்சியாக நடைபெற்றமை இவரின் சேவையின் பிரதிபலிப் பாகும். இவரின் மகனின் பள்ளித் தோழனான எனக்கு வித்தியா சாலையில் தினமும் இவரின் தரிசனம் கிடைக்கவும், இவரின் கல்விப்பணியை தொடரவும் கிடைத்த சந்தர்ப்பத்தைப் பெரும் பேறாகக் கொள்கின்றேன்.

வித்தியாசாலை சார்பில் அமரர் அவர்களின் ஆத்மா சாந்தி பெற வரதராஜப் பெருமாளை பிரார்த்தித்து அமைகின்றேன்.

**பு. ஸ்ரீவிக்னேஸ்வரன்**
அதிபர்

உ

ஓய்வுபெற்ற அதிபர்

**திரு. சின்னத்தம்பி சடாட்சரம் அவர்களின்**

# இரங்கற் செய்தி

## என் இணைபிரியா நண்பன்

அமரர் குணரத்தினம் செல்வத்துரை அதிபராகவும் சிறந்த வைத்திய கலாநிதியாகவும் விளங்கினார். அவர்களின் பிரிவால் வாடும் நண்பனின் **கண்ணீர் அஞ்சலி**

எங்கள் வீட்டுக்கு மோட்டார் சைக்கிளில் அடிக்கடி வருவார். நாங்கள் நாற்பத்தேழு வருடங்கள் வள்ளுவன் கூற்றுக்கமைய வாழ்ந்தோம். அதனைப் பார்த்து பெருமையடைந்த காலன் நாயுருவில் வந்து எம்மைப் பிரித்து விட்டான். நாங்கள் உம்மை இழந்து கலங்கினோம். கதறினோம், அழுதோம், கண்ணீர் விட்டோம், களைத்தோம், தேறினோம். பிறந்தோர் இறப்பது நியதி யென நினைத்துத் தேறினோம். ஐயா உங்களை எப்படி மறப்பேன் மறந்தாலும் உங்கள் தலைப்பாகையும், சந்தனப் பொட்டுடன் நான் அறிந்த காலந்தொட்டு எத்தனை விதமான மோட்டார் சைக்கிளில் கம்பீரத்தோற்றமும் எம்முன் எந்நேரமும் காட்சி அழிக்கின்றதே.

ஐயா வரும் நேரங்களில் ஏதும் சுகயீனம் என்று சொன்னால் கைபிடித்துப்பார்த்து மருந்துகள் தந்து நல்ல அறிவு ரைகள் சொல்லுவார்.

உங்களை பிரிந்து கலங்கும் உங்கள் குடும்பத்தினருக்கு எனது அநுதாபத்தைக் கூறுகின்றேன் ஐயா. உங்கள் ஆத்ம சாந்திக்காக இறைவனை வணங்குகின்றோம்.

***சின்னத்தம்பி சடாட்சரம்***
ஓய்வுபெற்ற அதிபர்

உ

# திரு. K. S. துரைரத்தினம்

அவர்களின்

# இரங்கற்பா

## போற்றுதல் செய்கிறேன்

பொன்னுயர் சுழிபுரம் பூம்பதி யதனில்
மன்னிய செல்வனாம் வருகுண ரத்தினம்
செய்தவத் தால்வரும் செல்வத் துரையெனும்
மெய்யுணர் சான்றோன் மிளிரும் ஆசிரியம்
பெரும்பதம் புரிந்து பிறங்கிடு மக்களை
வரும்புகழ் சிறந்த மாண்புற வைத்தவர்
மேவுயாழ் சைவ விருத்திச் சங்கம்
சீவனாய் நினைந்து செயற்றிறம் படைத்தார்
கண்ணிய உயிர்களைக் காக்கும் வைத்திய
புண்ணியம் புரிந்த புனிதச் செம்மல்
தற் செருக்கில்லாச் சற்குண வள்ளல்
உற்றவர் நண்பர் உறவினர் எவர்க்கும்
இயன்ற துணையாய் இன்முகம் காட்டிப்
பயின்றிடு சமூகப் பணிபல புரிந்தோன்
அன்பினால் எம்மனம் அகலாச் செல்வன்
இன்பச் சிவனடி இருந்து சுகம்பெற
அஞ்சலி மலரால் அன்னார்க் கிரங்கி
நெஞ்சகம் நைந்து போற்றுதல் செய்கிறேன்.

**K. S. துரைரத்தினம்**
கொக்குவில்

ஓய்வுபெற்ற ஆசிரியர்

## திரு. சீ. கந்தசாமி அவர்களின்

# இரங்கற் செய்தி

## எங்கள் அதிபர்

எமது அன்பிற்கும் பெருமதிப்பிற்கும் உரிய அதிபர் அமரர் திரு. கு. செல்வத்துரை அவர்கள் இன்று எம்மிடையே இல்லை என்பதை நினைக்க மனம் வேதனையடைகிறது. மரணம் இயற்கையானது என்பது யாருமே மறந்துவிடமுடியாது. மண்ணில் தோன்றிய அனைவரும் என்றோ ஒரு நாள் மறையத்தான் வேண்டும் என்பதைத் தெளிவாகத் தெரிந்திருந்தும்கூட சிலருடைய மறைவு எமக்கு மிகவும் வேதனையைத் தருகிறது. அந்த வரிசையில் எங்கள் அதிபரின் மறைவு பேரதிர்ச்சியையும் பெருங்கவலையையும் தருகிறது.

எனது ஊர்ப் பாடசாலையாகிய பொன்னாலை வரதராஜப் பெருமாள் வித்தியாசாலையில் அமரர் திரு. கு. செல்வத்துரை அவர்கள் அதிபராகக் கடமைற்றிய காலத்தில் அவரின் கீழ் நாலைந்து வருடங்கள் ஆசிரியராகக் கடமையாற்றும் சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்தது. அப்பொழுது தான் அவரது இனிய சுபாவம் புரிந்தது. தனது மீசையைத் தடவியபடி சிரித்துக் கொண்டே அறிவுரைகள் கூறும் அவரது இனிய முகம் கண்முன்னே நிற்கிறது. பொதுவாக நியாயம் எனப்பட்டதை ஆணித்தரமாக எடுத்துக்கூற அவர் என்றுமே பின்நின்றதில்லை.

பொன்னாலை வரதராஜப்பெருமாள் வித்தியாசாலையில் இல்ல விளையாட்டுப் போட்டியை அறிமுகப்படுத்திய பெருமை எங்கள் அதிபரையே சேரும். வேட்டியை மடித்துக் கட்டிக்கொண்டு தலைப் பாகையுடன் மாணவர்களுக்கு அஞ்சலோட்டம் பழக்குவது கண் கொள்ளாக் காட்சியாகும்.

ஆசிரியர் பணியைப் போலவே அவரது வைத்தியப் பணியும் மகத்தானது. ஆசிரியர் யாராவது சுகயீனம் காரணமாக வீடு செல்ல அனுமதி கேட்டால் உடனே கையைப்பிடித்து நாடி பார்த்து நோய்க்கேற்ற மருந்தையும் தந்து வீடு செல்ல அனுமதியும் தருவார்.

இவர் நல்லாசானாய், சிறந்த வைத்தியனாக, குடும்பத் தலைவனாக நண்பனாக, ஆலோசகனாக விளங்கி எல்லோர் மனங்களிலும் நிறைந்து நிற்கின்றார். அன்னாரின் இழப்பு ஈடு செய்ய முடியாததொன்றாகும்.

அன்னாரின் மறைவினால் துயருற்றிருக்கும் மனைவி, பிள்ளைகள் மற்றும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களை எனது சார்பிலும் எனது குடும்பத்தவர் சார்பிலும் தெரிவிப்பதோடு இவரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல நாராயணன் அடிகளை வேண்டி நிற்கின்றேன்.

ஓம் சாந்தி

**சீ. கந்தசாமி**
ஓய்வுபெற்ற ஆசிரியர்

உ
சிவமயம்

# உயர்தொழில்நுட்ப நிறுவனத்தாரின்

# இரங்கற்செய்தி

காவியம் படைத்தவர் அமரர் செல்வத்துரையாவர். அன்னார் சுழிபுரம் மேற்கில் புகழ்பெற்ற குடும்பத்தைச் சேர்ந்த பெரியார். அவர்களை எமக்கு அவரது கடைசி மகள் பத்மாம்பிகை 24-04-98 உயர் தொழில் நுட்பநிறுவனத்தில் உத்தி யோகத்தர் ஆகிய பின்பே எங்களுக்குத் தெரியும். அந்த நாள் முதல் அவர் தனது அன்பு மகளை வேலைக்கு கூட்டிக்கொண்டு வரும்போதும் போகும் போதும் எங்களுடன் குடும்ப உறவினர்கள் போல் கலந்துரையாடுவார். அவர் மகாகவி பாரதியைப் போன்ற தோற்றமும் நகைச்சுவை ததும்பும் உரையாடலும், ஆழ்ந்த அறிவையும் அனுபவத்தையும் நன்கு விளங்கக் கூடியதாக இருந்தது. அத்துடன் அவர் ஒரு ஓய்வுபெற்ற அதிபராக இருந்த போதும் சுதேச வைத்தியத்துறையிலும், சொந்தக் கிராமத்திலும் தேசிய ரீதியாகவும் புகழ் பெற்றிருந்தார். அத்துடன் சைவ வித்தியா விருத்திச் சங்கத்திலும் நிர்வாக உறுப்பினராக இருந்தது மட்டுமன்றி இந்துமத வளர்ச்சியிலும் முக்கிய பங்கெடுத்துக் கொண்டார். இன்னும் அவருடைய இன்முகம் எங்கள் மனக்கண் முன் நிற்கின்றது. இவ்வாறு புகழ்பெற்று சுழிபுரம் கிராமத்திலேயே காவியம் படைத்த திரு. செல்வத்துரை அவர்களின் திடீர்மறைவு அவருடைய குடும்பத்திற்கு பேரிழப்பாக அமைந்துள்ளது. இதனால் துன்புற்றிருக்கும் அவரின் குடும்பத்துக்கு எங்கள் ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்வதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்போமாக.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**உயர்தொழில் நுட்ப நிறுவன**
**இயக்குனர், விரிவுரையாளர்கள்**
**உத்தியோகத்தர்கள், மாணவர்கள்**

உயர்தொழில் நுட்ப நிறுவனம்
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

உ
சிவமயம்

## மைத்துனரான
## திரு. மாணிக்கம் ஆறுமுகம் அவர்களின்
# இரங்கற் செய்தி

எனது அன்பும் பண்பும் அறிவும் உள்ள மச்சான் தாய்வழியிலும் தந்தைவழியிலும் உள்ள சொந்த மச்சான் ஆசிரியர் செல்லத்துரை. 1934ம் ஆண்டில் இருந்து இறக்கும் வரையும் அவரோடு ஒன்றாய் இருந்தோம். அவர் ஒரு சிறந்த ஆசிரியரும் புலவரும் ஆவார். அவர் தன் நிலத்தான் ஆண்ட பெரிய சித்தரின் பூட்டப்பிள்ளை ஆவார். அவர் எனது மனைவி சுகயீனமுற்று இருக்கையில் வைத்தியமும் செய்தவர். 01-08-84ல் எனது மனைவி சுகயீனமாக இருக்கையில் அவர் கைநாடி பிடித்துப் பார்த்து இன்னமும் இரண்டு நாட்களில் ஆள் முடிந்து விடுவா. நீங்கள் வேலைக்குப் போக வேண்டாம். வீட்டில் நின்று பாருங்கோ என்று சொல்லி நான் நின்று பார்த்தேன். அவர் சொன்ன மாதிரி 2ம் நாள் எனது மனைவி இறந்துவிட்டார். எமக்கு மட்டுமல்ல எம் போன்ற பலருக்கும் கைநாடி பிடித்துச் சொன்னது உண்மையே.

அவரின் பிரிவால் வாடும் துணைவி பிள்ளைகள் யாவருக்கும் எனது கவலையைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**மாணிக்கம் ஆறுமுகம்**
(மைத்துனர் சண்முகநாதன்)

உ
சிவமயம்

# பஞ்சபுராணம்

## விநாயகர் துதி

வாக்குண்டாம் நல்ல மனமுண்டாம் மாமலராள்
நோக்குண்டாம் மேனி நுடங்காது - பூக்கொண்டு
துப்பார் திருமேனித் தும்பிக்கையான் பாதம்
தப்பாமற் சார்வார் தமக்கு.

## தேவாரம்

நெஞ்சமுமக் கேயிட மாகவைத்தேன்
நினையாதொரு போது மிருந்தறியேன்
வஞ்சமிது வொப்பது கண்டறி யேன்
வயிற்றோடு துடக்கி முடக்கியிட
நஞ்சாகி வந்தென்னை நலிவதனை
நணுகாமற் றுரந்து கரந்துமிடீர்
அஞ்சே லுமென்னீர் அதிகைக் கெடில
வீரட்டா னத்துறை அம்மானே.

## திருவாசகம்

சிந்தனைநின் தனக்காக்கி நாயி னேன்தன்
கண்ணிணைநின் திருப்பாதப் போதுக் காக்கி
வந்தனையும் அம்மலர்க்கே யாக்கி வாக்குன்
மணிவார்த் தைக்காக்கி ஐம்புலன் களார
வந்தனை ஆட்கொண்டுள்ளே புகுந்த விச்சை
மாலமுதப் பெருங்கடலே மலையே யுன்னைத்
தந்தனைசெந் தாமரைக்கா டனைய மேனித்
தனிச்சுடரே யிரண்டுமினித் தனிய னேற்கே.

## திருவிசைப்பா

நையாத மனத்தினனை நைவிப்பான் இத்தெருவே
ஐயாநீ உலாப்போந்த அன்றுமுதல் இன்றுவரை
கையாரத் தொழுதருவி கண்ணாரச் சொரிந்தாலும்
செய்யாயோ அருள்?கோடைத் திரைலோக்கிய சுந்தரனே.

## திருப்பல்லாண்டு

தாதையைத் தாளறவீசிய சண்டிக்கிவ் வண்டத்தொடுமுடனே
பூதலத்தோரும் வணங்கப் பொற்கோயிலும் போனகமுமருளிச்
சோதிமணி முடித்தாமமுந் தொண்டர்க்கு நாயகமும்
பாதகத்துக்குப் பரிசுவைத்தானுக்கே பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

ஞானத்தின் திருவுருவை நான்மறையின் தனித்துணையை
வானத்தின் மிசையன்றி மண்ணில்வளர் மதிக்கொழுந்தை
தேனக்க மலர்க்கொன்றைச் செஞ்சடையார் சீர்தொடுக்கும்
கானத்தின் எழுபிறப்பைக் கண்களிப்பக் கண்டார்கள்.

## திருப்புகழ்

உம்பர்தருத் தேனுமணிக் கசிவாகி
ஒண்கடலிற் றேனமுதத் துணர்வூறி
இன்பரசத்தே பருகிப் பலகாலும்
என்றனுயிர்க் காதரவுற் றருள்வாயே
தம்பிதனக் காகவனத் தணைவோனே
தந்தைவலத் தாலருள்கைக் கனியோனே
அன்பர்தமக் கானநிலைப் பொருளோனே
ஐந்துகரத் தானைமுகப் பெருமாளே.

## வாழ்த்து

வான்முகில் வழாதுபெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலாதுயிர்கள் வாழ்க!
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

திருச்சிற்றம்பலம்.

ஔவையார் அருளிய

# விநாயகர் அகவல்

சீதக் களபச்செந்தா மரைப்பூம்
பாதச் சிலம்பு பலஇசை பாட
பொன்அரை ஞாணும் பூந்துகில் ஆடையும்
வன்ன மருங்கில் வளர்ந்தழ கெறிப்ப
பேழை வயிறும் பெரும்பாரக் கோடும்
வேழ முகமும் விழங்குசிந் தூரமும்
அஞ்சு கரமும் அங்குச பாசமும்
நெஞ்சிற் குடிகொண்ட நீல மேனியும்
நான்ற வாயும் நாலிரு புயமும்
மூன்று கண்ணும் மும்மதச் சுவடும்
இரண்டு செவியும் இலங்குபொன் முடியும்
திரண்டமுப் புரிநூல் திகழொளி மார்பும்
சொற்பதம் கடந்த துரிய மெஞ்ஞான
அற்புதம்நின்ற கற்பகக் களிறே
முப்பழம் நுகரும் மூஷிக வாஹன
இப்பொழுது என்னை ஆட்கொள்ள வேண்டி
தாயா யெனக்குத் தானெழுந் தருளி
மாயாப் பிறவி மயக்கம் அறுத்துத்
திருந்திய முதல்ஐந் தெழுத்துந் தெளிவாய்ப்
பொருந்தவே வந்தென் உளந்தனிற் புகுந்து
குருவடி வாகிக் குவலயந் தன்னில்
திருவடி வைத்துத் திரமிது பொருளென
வாடா வகைதான் மகிழ்ந்தெனக் கருளி
கோடா யுதத்தால் கொடுவினை களைந்தே
உவட்டா உபதேசம் புகட்டியென் செவியில்
தெவிட்டாத ஞானத் தெளிவையும் காட்டி
ஐம்புலன் தன்னை அடக்கும் உபாயம்
இன்புறு கருணையின் இனிதெனக் கருளி
கருவிகள் ஒடுங்கும் கருத்தறி வித்து
இருவினை தன்னை அறுத்திருள் கடிந்து
தலமொரு நான்குந் தந்தெனக் கருளி
மலமொரு மூன்றின் மயக்க மறுத்தே
ஒன்பது வாயில் ஒரு மந்திரத்தால்
ஐம்புலக் கதவை அடைப்பதுங் காட்டி

ஆறா தாரத்து அங்குச நிலையும்
பேறா நிறுத்திப் பேச்சுரை அறுத்தே
இடைபிங் கலையின் எழுத்தறிவித்துக்
கடையிற் சுழுமுனைக் கபாலமுங் காட்டி
மூன்று மண்டலத்தின் முட்டிய தூணின்
நான்றெழு பாம்பின் நாவி லுணர்த்தி
குண்டலி யதனிற் கூடிய வசபை
விண்டெழு மந்திரம் வெளிப்பட உரைத்து
மூலா தாரத்தின் மூண்டெழு கனலைக்
காலா லெழுப்புங் கருத்தறி வித்தே
அமுத நிலையும் ஆதித்தன் இயக்கமும்
குமுத சகாயன் குணத்தையுங் கூறி
இடைச்சக் கரத்தின் ஈரெட்டு நிலையும்
உடற்சக் கரத்தின் உறுப்பையுங் காட்டி
சண்முக தூலமும் சதுர்முக சூக்கமும்
எண்முக மாக இனிதெனக் கருளிப்
புரியட்ட காயம் புலப்பட எனக்குத்
தெரியெட்டு நிலையுந் தெரிசனப் படுத்திக்
கருத்தினிற் கபால வாயில் காட்டி
இருத்தி முத்தி இனிதெனக் கருளி
என்னை அறிவித்து எனக்கருள் செய்து
முன்னை வினையின் முதலைக் களைந்தே
வாக்கும் மனமும் இல்லா மனோலயம்
தேக்கியே எந்தன் சிந்தை தெளிவித்து
இருள்வெளி இரண்டுக்கு ஒன்றிட மென்ன
அருள்தரும் ஆனந்தத்து அழுத்திஎன் செவியில்
எல்லை யில்லா ஆனந்தம் அளித்து
அல்லல் களைந்து அருள்வழி காட்டி
சத்தத்தி னுள்ளே சதாசிவங் காட்டி
சித்தத்தி னுள்ளே சிவலிங்கம் காட்டி
அணுவிற் கணுவாய் அப்பாலுக் கப்பாலாய்
கணுமுற்றி நின்ற கரும்புள்ளே காட்டி
வேடமும் நீறும் விளங்க நிறுத்திக்
கூடுமெய்த் தொண்டர் குழாத்துடன் கூட்டி
அஞ்சக் கரத்தின் அரும்பொருள் தன்னை
நெஞ்சக் கருத்தின் நிலையறி வித்துத்
தத்துவ நிலையைத் தந்தெனை யாண்ட
வித்தக விநாயக விரைகழல் சரணே.

(விநாயகர் அகவல் முற்றிற்று)

உ
சிவமயம்

# திருவாசகம்

திருப்பெருந்துறையில் அருளிய

# சிவபுராணம்

(சிவனது அநாதிமுறையான பழமை)

திருச்சிற்றம்பலம்

## காப்பு

தொல்லை இரும்பிறவிச் சூழும் தளைநீக்கி
அல்லலறுத்(து) ஆனந்தம் ஆக்கியதே - எல்லை
மருவா நெறியளிக்கும் வாதவூர் எம்கோன்
திருவா சகம்என்னும் தேன்.

## கலிவெண்பா

நமச்சிவாய வாஅழ்க! நாதன்தாள் வாழ்க!
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க
கோகழி ஆண்ட குருமணிதன் தாள்வாழ்க!
ஆகமம் ஆகிநின்(று) அண்ணிப்பான் தாள்வாழ்க!
ஏகன் அநேகன் இறைவன் அடிவாழ்க!
வேகம் கெடுத்(து) ஆண்ட வேந்தனடி வெல்க!
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க!
புறத்தார்க்குச் சேயோன்றன் பூங்கழல்கள் வெல்க!
கரங்குவிவார் உள்மகிழும் கோன்கழல்கள் வெல்க!
சிரங்குவிவார் ஓங்குவிக்கும் சீரோன்கழல் வெல்க!
ஈசன் அடிபோற்றி எந்தை அடிபோற்றி!
தேசனடி போற்றி சிவன்சே வடிபோற்றி
நேயத்தே நின்ற நிமலன் அடிபோற்றி!
மாயப் பிறப்பறுக்கும் மன்னன் அடிபோற்றி!
சீரார் பெருந்துறைநம் தேவன் அடிபோற்றி!
ஆராத இன்பம் அருளுமலை போற்றி!
சிவன்அவன்என் சிந்தையுள் நின்ற அதனால்
அவன்அருளாலே அவன்தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுராணந் தன்னை
முந்நை வினைமுழுதும் ஓய உரைப்பன்யான்

கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற்(கு) எட்டா எழில்ஆர் கழல்இறைஞ்சி
விண்நிறைந்து மண்நிறைந்து மிக்காய் விளங்கொளியாய்!
எண்ணிறந் தெல்லை இலாதானே! நின்பெருஞ்சீர்!
பொல்லா வினையேன் புகழுமாறொன்றறியேன்
புல்ஆகிப் பூடாய்ப் புழுவாய் மரம்ஆகிப்
பல்விருகம் ஆகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்அசுரர் ஆகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்றவித் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தே னெம்பெருமான்
மெய்யேயுன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்யவென் உள்ளத்துள் ஓங்கார மாய்நின்ற
மெய்யா விமலா! விடைப்பாகா வேதங்கள்
ஐயா, வெனவோங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே!
வெய்யாய் தணியாய் இயமான னாம்விமலா
பொய்யா யினவெல்லாம் போயகல வந்தருளி
மெஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞான மில்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானந் தன்னை அகல்விக்கும் நல்லறிவே
ஆக்கம் அளவிறுதி இல்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அளிப்பா யருள்தருவாய்
போக்குவா யென்னைப் புகுவிப்பாய் நின்றொழும்பின்
நாற்றத்தி னேரியாய் சேயாய் நணியானே
மாற்றம் மனம்கழிய நின்ற மறையோனே
கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்களோ ரைந்துடையாய் விண்ணோர்க ளேத்த
மறைந்திருந்தா யெம்பெருமான் வல்வினையேன் தன்னை
மறைந்திட மூடிய மாய விருளை
அறம்பாவ மென்னும் அருங்கயிற்றாற் கட்டி
புறந்தோல் போர்த்தெங்கும் புழுவழுக்கு மூடி
மலஞ்சோரும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா உனக்கு
கலந்தவன் பாகிக் கசிந்துள் ளுருகும்
நலந்தா னிலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்
தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனார் அமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே

நேச வருள்புரிந்து நெஞ்சில் வஞ்சங்கெடப்
பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா வமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே
நீராய் உருக்கியென் ஆருயிராய் நின்றானே
இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே
அன்பருக் கன்பனே யாவையுமாய் அல்லையுமாஞ்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி யல்லானே
ஈர்த்தென்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்தமெய்ஞ் ஞானத்தாற் கொண்டுணர்வார் தம்கருத்தின்
நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே
காக்குமெங் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தாமிக் காய்நின்ற
தோற்றச் சுடரொளியாய் சொல்லாத நுண்ணுணர்வாய்
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவேயென் சிந்தனையுள்
ஊற்றான உண்ணார் அமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பி னுட்கிடப்ப
ஆற்றேனெம் மையா வரனேயோ வென்றென்று
போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பைக் கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே
அல்லற் பிறவி அறுப்பானே ஓவென்று
சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக்கீழ்
பல்லோரு மேத்தப் பணிந்து.

திருச்சிற்றம்பலம்

*

உ

சிவமயம்

# திருவெம்பாவை

## சக்தியை வியந்தது

வெண்டளையான் வந்த இயற்றரவிணைக் கொச்சகக் கலிப்பா

திருச்சிற்றம்பலம்

ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெரும்
சோதியை யாம்பாடக் கேட்டேயும் வாள்தடங்கண்
மாதே வளருதியோ வன்செவியோ நின்செவிதான்
மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்தொலிபோய்
வீதிவாய்க் கேட்டலுமே விம்மிவிம்மி மெய்ம்மறந்து
போதார் அமளியின்மேல் நின்றும் புரண்டிங்ஙன்
ஏதேனும் ஆகாள் கிடந்தாள் என் னேஎன்னே
ஈதேஎந் தோழி பரிசேலோர் எம்பாவாய்! 1

பாசம் பரம்சோதிக் கென்பாய் இராப்பகல்நாம்
பேசும்போ தெப்போதிப் போதார் அமளிக்கே
நேசமும் வைத்தனையோ நேரிழையாய் நேரிழையீர்!
சீசீ இவையுஞ் சிலவோ விளையாடி
ஏசும் இடம்ஈதோ விண்ணோர்கள் ஏத்துதற்குக்
கூசும் மலர்ப்பாதந் தந்தருள வந்தருளும்
தேசன் சிவலோகன் தில்லைச்சிற் றம்பலத்துள்
ஈசனார்க் கன்பார்யாம் ஆரேலோர் எம்பாவாய் 2

முத்தன்ன வெண்ணகையாய்! முன்வந்து எதிரெழுந்தென்
அத்தன்ஆ னந்தன் அமுதன்என் றள்ஊறித்
தித்திக்கப் பேசுவாய் வந்துன் கடைதிறவாய்
பத்துடையீர்! ஈசன் பழவடியீர்! பாங்குடையீர்!
புத்தடியோம் புன்மைதீர்த் தாட்கொண்டால் பொல்லாதோ
எத்தோநின் அன்புடைமை எல்லோம் அறியோமோ
சித்தம் அழகியார் பாடாரோ நம்சிவனை
இத்தனையும் வேண்டும் எமக்கேலோர் எம்பாவாய்! 3

ஒண்ணித் திலநகையாய்! இன்னம் புலர்ந்தின்றோ
வண்ணக் கிளிமொழியார் எல்லாரும் வந்தாரோ
எண்ணிக்கொ டுள்ளவா சொல்லுகோம் அவ்வளவும்
கண்ணைத் துயின்றவமே காலத்தைப் போக்காதே

விண்ணுக் கொருமருந்தை வேத விழுப்பொருளைக்
கண்ணுக் கினியானைப் பாடிக் கசிந்துள்ளம்
உண்நெக்கு நின்றுருக யாம்மாட்டோம் நீயேவந்(து)
எண்ணிக் குறையில் துயில்ஏலோர் எம்பாவாய்! 4

மாலறியா நான்முகனும் காணா மலையினைநாம்
போலறிவோம் என்றுள்ள பொக்கங்க ளேபேசும்
பாலூறு தேன்வாய்ப் படிறீ! கடைதிறவாய்
ஞாலமே விண்ணே பிறவே அறிவரியான்
கோலமும் நம்மைஆட் கொண்டருளிக் கோதாட்டுஞ்
சீலமும் பாடிச் சிவனே சிவனேஎன்(று)
ஓலம் இடினும் உணராய் உணராய்காண்
ஏலக் குழலி பரிசேலோர் எம்பாவாய்! 5

மானே!நீ நென்னலை நாளை வந்துங்களை
நானே எழுப்புவன் என்றலும் நாணாமே
போன திசைபகராய் இன்னம் புலர்ந்தின்றோ
வானே நிலனே பிறவே அறிவரியான்
தானேவந்து எம்மைத் தலையளித்து ஆட்கொண்டருளும்
வான்வார் கழல்பாடி வந்தோர்க்குஉன் வாய்திறவாய்
ஊனே உருகாய் உனக்கே உறும்எமக்கு
ஏனோர்க்கும் தங்கோனைப் பாடேலோர் எம்பாவாய்! 6

அன்னே இவையும் சிலவோ பலஅமரர்
உன்னற் கரியான் ஒருவன் இருஞ்சீரான்
சின்னங்கள் கேட்பச் சிவன்என்றே வாய்திறப்பாய்
தென்னாஎன் னாமுன்னந் தீசேர் மெழுகொப்பாய்
என்ஆனை என்அரையன் இன்னமுதென் றெல்லோமுஞ்
சொன்னோம்கேள் வெவ்வேறாய் இன்னம் துயிலுதியோ?
வன்னெஞ்சப் பேதையர்போல் வாளா கிடத்தியால்
என்னே துயிலின் பரிசேலோர் எம்பாவாய்! 7

கோழி சிலம்பச் சிலம்பும் குருகெங்கும்
ஏழில் இயம்ப இயம்பும்வெண் சங்கெங்கும்
கேழில் பரஞ்சோதி கேழில் பரங்கருணை
கேழில் விழுப்பொருள்கள் பாடினோம் கேட்டிலையோ
வாழியீ தென்ன உறக்கமோ வாய்திறவாய்
ஆழியான் அன்புடைமை ஆமாறும் இவ்வாறோ
ஊழி முதல்வனாய் நின்ற ஒருவனை
ஏழைபங் காளனையே பாடேலோர் எம்பாவாய்! 8

முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப் பழம்பொருளே
பின்னைப் புதுமைக்கும் பேர்த்தும்அப் பெற்றியனே
உன்னைப் பிரானாகப் பெற்றஉன் சீரடியோம்
உன்னடியார் தாள்பணிவோம் ஆங்கவர்க்கே பாங்காவோம்
அன்னவரே எங்கணவர் ஆவார் அவர்உகந்து
சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணிசெய்வோம்
இன்ன வகையே எமக்கெங்கோன் நல்குதியேல்
என்ன குறையும் இலோம்ஏலோர் எம்பாவாய்! 9

பாதாளம் ஏழினும்கீழ் சொற்கழிவு பாதமலர்
போதார் புனைமுடியும் எல்லாப் பொருள்முடிவே
பேதை ஒருபால் திருமேனி ஒன்றல்லன்
வேதமுதல் விண்ணோரும் மண்ணும் துதித்தாலும்
ஓத உலவா ஒருதோழன் தொண்டருளன்
கோதில் குலத்தரன்றன் கோயிற்பிணாப் பிள்ளைகாள்
ஏதவன்ஊர் ஏதவன்பேர் ஆர்உற்றார் ஆர்அயலார்
ஏதவனைப் பாடும் பரிசேலோர் எம்பாவாய்! 10

மொய்யார் தடம்பொய்கை புக்கு முகேர்என்னக்
கையாற் குடைந்து குடைந்துன் கழல்பாடி
ஐயா வழியடியோம் வாழ்ந்தோம்காண் ஆரழல்போல்
செய்யா!வெண் ணீறாடி! செல்வா! சிறுமருங்குல்
மையார் தடங்கண் மடந்தை மணவாளா!
ஐயா!நீ ஆட்கொண் டருளும் விளையாட்டின்
உய்வார்கள் உய்யும் வகையெல்லாம் உய்ந் தொழிந்தோம்
எய்யாமற் காப்பாய் எமையேலோர் எம்பாவாய்! 11

ஆர்த்த பிறவித் துயர்கெடநாம் ஆர்த்தாடும்
தீர்த்தன்நற் றில்லைச்சிற் றம்பலத்தே தீயாடும்
கூத்தன்இவ் வானும் குவலயமும் எல்லோமும்
காத்தும் படைத்தும் கரந்தும் விளையாடி
வார்த்தையும் பேசி வளைசிலம்ப வார்கலைகள்
ஆர்ப்பரவஞ் செய்ய அணிகுழல்மேல் வண்டார்ப்ப
பூத்திகழும் பொய்கை குடைந் துடையான் பொற்பாதம்
ஏத்தி இருஞ்சுனைநீர் ஆடேலோர் எம்பாவாய்! 12

பைங்குவளைக் கார்மலரால் செங்கமலப் பைம்போதால்
அங்கம் குருகினத்தால் பின்னும் அரவத்தால்
தங்கள் மலங்கழுவு வார்வந்து சார்தலினால்
எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்றிசைந்த

பொங்கும் மடுவில் புகப்பாய்ந்து பாய்ந்துநம்
சங்கம் சிலம்பச் சிலம்பு கலந் தார்ப்பக்
கொங்கைகள் பொங்கக் குடையும் புனல்பொங்கப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோர் எம்பாவாய்! 13

காதார் குழையாடப் பைம்பூண் கலனாடக்
கோதை குழலாட வண்டின் குழாமாடச்
சீதப் புனலாடிச் சிற்றம் பலம்பாடி
வேதப் பொருள்பாடி அப்பொருள்ஆ மாபாடி
சோதித் திறம்பாடி சூழ்கொன்றைத் தார்பாடி
ஆதித் திறம்பாடி அந்தம்ஆ மாபாடிப்
பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளைதன்
பாதத் திறம்பாடி ஆடேலோர் எம்பாவாய்! 14

ஓரொருகால் எம்பெருமான் என்றென்றே நம்பெருமான்
சீர்ஒருகால் வாய்ஓவாள் சித்தம் களிகூர
நீர்ஒருகால் ஓவா நெடுந்தாரை கண்பனிப்பப்
பார்ஒருகால் வந்தனையால் விண்ணோரைத் தான்பணியாள்
பேர் அரையற் கிங்ஙனே பித்தொருவர் ஆமாறும்
ஆர்ஒருவர் இவ்வண்ணம் ஆட்கொள்ளும் வித்தகர்தாள்
வார்உருவப் பூண்முலையீர் வாயார நாம்பாடி
ஏர்உருவப் பூம்புனல் பாய்ந்தாடேலோர் எம்பாவாய்! 15

முன்னிக் கடலைச் சுருக்கி எழுந்துடையாள்
என்னத் திகழ்ந்தெம்மை ஆளுடையாள் இட்டிடையின்
மின்னிப்பொழிந் தெம் பிராட்டி திருவடிமேல்
பொன்னஞ் சிலம்பிற் சிலம்பித் திருப்புருவம்
என்னச் சிலைகுலவி நம்தம்மை ஆளுடையாள்
தன்னிற் பிரிவிலா எங்கோமா னன்பர்க்கு
முன்னி யவள்நமக்கு முன்சுரக்கும் இன்னருளே
என்னப் பொழியாய் மழையேலோர் எம்பாவாய்! 16

செங்க ணவன்பால் திசைமுகன்பால் தேவர்கள்பால்
எங்கும் இலாததோர் இன்பம்நம் பாலதாய்க்
கொங்குண் கருங்குழலி நந்தம்மைக் கோதாட்டி
இங்குநம் இல்லங்கள் தோறும் எழுந்தருளிச்
செங்கமலப் பொற்பாதம் தந்தருளும் சேவகனை
அங்கண் அரசை அடியோங்கட் காரமுதை
நங்கள் பெருமானைப் பாடி நலந்திகழப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோர் எம்பாவாய்! 17

அண்ணா மலையான் அடிக்கமலஞ் சென்றிறைஞ்சும்
விண்ணோர் முடியின் மணித்தொகைவீ றற்றாற்போல்
கண்ணார் இரவி கதிர்வந்து கார்கரப்பத்
தண்ணார் ஒளிமழுங்கித் தாரகைகள் தாம்அகலப்
பெண்ணாகி ஆணாய் அலியாய்ப் பிறங்கொளிசேர்
விண்ணாகி மண்ணாகி இத்தனையும் வேறாகிக்
கண்ணார் அமுதமுமாய் நின்றான் கழல்பாடிப்
பெண்ணேஇப் பூம்புனல்பாய்ந் தாடேலோர் எம்பாவாய்! 18

உங்கையிற் பிள்ளை உனக்கே அடைக்கலம்என்(று)
அங்கப் பழஞ்சொல் புதுக்கும்எம் அச்சத்தால்
எங்கள் பெருமான் உனக்கொன் றுரைப்போம்கேள்
எங்கொங்கை நின்அன்பர் அல்லார்தோள் சேரற்க
எங்கை உனக்கல்லா தெப்பணியும் செய்யற்க
கங்குல் பகல்எங்கண் மற்றொன்றும் காணற்க
இங்கிப் பரிசே எமக்கெங்கோன் நல்குதியேல்
எங்கெழில்என் ஞாயி(று) எமக்கேலோர் எம்பாவாய்! 19

போற்றி அருளுகநின் ஆதியாம் பாதமலர்
போற்றி அருளுகநின் அந்தமாம் செந்தளிர்கள்
போற்றிஎல் லாஉயிர்க்கும் தோற்றமாம் பொற்பாதம்
போற்றிஎல் லாஉயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்
போற்றிஎல் லாஉயிர்க்கும் ஈறாம் இணையடிகள்
போற்றிமால் நான்முகனும் காணாத புண்டரிகம்
போற்றியாம் உய்யஆட் கொண்டருளும் பொன்மலர்கள்
போற்றியாம் மார்கழிநீ ராடேலோர் எம்பாவாய்! 20

திருச்சிற்றம்பலம்.

உ

## குமரகுருபர சுவாமிகள்
அருளிச் செய்த

# சகலகலாவல்லி மாலை

வெண்டா மரைக்கன்றி நின்பதந்
தாங்கவென் வெள்ளையுள்ளத்
தண்டா மரைக்குத் தகாதுகொ
லோசக மேழுமளித்
துண்டா னுறங்க வொழித்தான்பித்
தாகவுண் டாக்கும்வண்ணம்
கண்டான் சுவைகொள் கரும்பே
சகல கலாவல்லியே. 1

நாடும் பொருட்சுவை சொற்சுவை
தோய்தர நாற்கவியும்
பாடும் பணியிற் பணித்தருள்
வாய்பங்க யாசனத்திற்
கூடும் பசும்பொற் கொடியே
கனதனக் குன்றுமைம்பாற்
காடும் சுமக்குங் கரும்பே
சகல கலாவல்லியே. 2

அளிக்கும் செழுந்தமிழ்த் தெள்ளமு
தார்ந்துன் னருட்கடலிற்
குளிக்கும் படிக்கென்று கூடுங்கொ
லோவுளங் கொண்டுதெள்ளித்
தெளிக்கும் பனுவற் புலவோர்
கவிமழை சிந்தக்கண்டு
களிக்குங் கலாப மயிலே
சகல கலாவல்லியே. 3

தூக்கும் பனுவற் றுறைதோய்ந்த
கல்வியுஞ் சொற்சுவைதோய்
வாக்கும் பெருகப் பணித்தருள்
வாய்வட நூற்கடலும்

தேக்குஞ் செழுந்தமிழ்ச் செல்வமும்
தொண்டர்செந் நாவினின்று
காக்கும் கருணைக் கடலே
சகல கலாவல்லியே. 4

பஞ்சப் பிதந்தரு செய்யபொற்
பாதபங் கேருகமென்
நெஞ்சத் தடத்தல ராததென்
னேநெடுந் தாட்கமலத்
தஞ்சத் துவச முயர்த்தோன்செந்
நாவு மகமும் வெள்ளைக்
கஞ்சத் தவிசொத் திருந்தாய்
சகல கலாவல்லியே. 5

பண்ணும் பரதமுங் கல்வியுந்
தீஞ்சொற் பனுவலும்யான்
எண்ணும் பொழுதெளி தெய்தநல்
காயெழு தாமறையும்
விண்ணும் புவியும் புனலுங்
கனலும்வெங் காலுமன்பர்
கண்ணுங் கருத்தும் நிறைந்தாய்
சகல கலாவல்லியே. 6

பாட்டும் பொருளும் பொருளாற்
பொருந்தும் பயனுமென்பாற்
கூட்டும் படிநின் கடைக்கணல்
காயுளங் கொண்டு தொண்டர்
தீட்டுங் கலைத்தமிழ்த் தீம்பா
லமுதந் தெளிக்கும் வண்ணம்
காட்டும்வெள் ளோதிமப் பேடே
சகல கலாவல்லியே. 7

சொல்விற் பனமு மவதான
முங்கவி சொல்லவல்ல
நல்வித்தை யுந்தந் தடிமைகொள்
வாய்நளி னாசனஞ்சேர்
செல்விக் கரிதென் றொருகால
முஞ்சிதையாமை நல்கும்
கல்விப் பெருஞ்செல்வப் பேறே
சகல கலாவல்லியே. 8

சொற்கும் பொருட்கு முயிராமெய்ஞ்
ஞானத்தின் தோற்றமென்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவர்
யார்நிலந் தோய்புழைக்கை
நற்குஞ் சரத்தின் பிடியோ
டரசன்ன நாணநடை
கற்கும் பதாம்புயத் தாளே
சகல கலாவல்லியே. 9

மண்கண்ட வெண்குடைக் கீழாக
மேற்பட்ட மன்னருமென்
பண்கண் டளவிற் பணியச்செய்
வாய்படைப் போன்முதலாம்
விண்கண்ட தெய்வம்பல் கோடியுண்
டேனும் விளம்பிலுன்போல்
கண்கண்ட தெய்வ முளதோ
சகல கலாவல்லியே. 10

## சரஸ்வதி துதி

நாடிப் புலங்கள் உழுவார் கரமும் நயவுரைகள்
தேடிக் கொழிக்குங் கவிவாணர் நாவும் செழுங்கருணை
ஓடிப் பெருகும் அறிவாளர் நெஞ்சும் உவந்துநடம்
ஆடிக் களிக்கும் மயிலே! உன்பாதம் அடைக்கலமே.

தேசிகவிநாயகம்பிள்ளை

# கந்தர் சஷ்டி கவசம்

திருப்பரங்குன்றுறை தீரன்

## காப்பு

அமரர் இடர்தீர அமரம் புரிந்த
குமரன்அடி நெஞ்சே குறி

## நேரிசை வெண்பா

துதிப்போர்க்கு வல்வினைபோம் துன்பம்போம் நெஞ்சில்
பதிப்போர்க்குச் செல்வம் பலித்துக் - கதித்தோங்கும்
நிஷ்டையும் கைகூடும் நிமலன் அருள்கந்தர்
சஷ்டி கவசம் தனை.

## நூல்

### நிலை மண்டில ஆசிரியப்பா

சஷ்டியை நோக்கச் சரவண பவனார்
சிஷ்டருக் குதவும் செங்கதிர் வேலோன்
பாத மிரண்டில் பன்மணிச் சதங்கை
கீதம் பாடக் கிண்கிணி யாட
மையல் நடஞ்செயும் மயில்வா கனனார்
கையில் வேலாலெனைக் காக்கவென் றுவந்து
வரவர வேலா யுதனார் வருக
வருக வருக மயிலோன் வருக
இந்திரன் முதலா எண்திசை போற்ற
மந்திர வடிவேல் வருக வருக
வாசவன் மருகா வருக வருக
நேசக் குறமகள் நினைவோன் வருக
ஆறுமுகம் படைத்த ஐயா வருக
நீறிடும் வேலவன் நித்தம் வருக
சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக
சரஹண பவனார் சடுதியில் வருக
ரஹண பவச ரரரர ரரர
ரிஹண பவச ரிரிரிரி ரிரிரி
விணபவ சரஹண வீரா நமோநம

நிபவ சரஹண நிறநிற நிறென
வசர ஹணப வருக வருக
அசுரர் குடிகெடுத்த ஐயா வருக
என்னை யாளு மிளையோன் கையில்
பன்னிரண் டாயுதம் பாசாங் குசமும்
பரந்த விழிகள் பன்னிரண் டிலங்க
விரைந்தெனைக் காக்க வேலோன் வருக
ஐயும் கிலியும் அடைவுடன் சௌவும்
உய்யொளி சௌவும் உயிரையும் கிலியும்
கிலியும் சௌவும் கிளரொளி யையும்
நிலைபெற் றென்முன் நித்தமு மொளிரும்
சண்முகன் றீயும் தனியொளி யொவ்வும்
குண்டலி யாஞ்சிவ குகன்றினம் வருக
ஆறு முகமும் அணிமுடி யாறும்
நீறிடு நெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச்செவ் வாயும்
நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்
ஈராறு செவியில் இலங்குகுண் டலமும்
ஆறிரு திண்புயத் தழகிய மார்பில்
பல்பூ ஷணமும் பதக்கமும் தரித்து
நன்மணி பூண்ட நவரத்தின மாலையும்
முப்புரி நூலும் முத்தணி மார்பும்
செப்பழ குடைய திருவயி றுந்தியும்
துவண்ட மருங்கில் சுடரொளிப் பட்டும்
நவரத்தினம் பதித்த நற்சீ ராவும்
இருதொடை யழகும் இணைமுழந் தாளும்
திருவடி யதனில் சிலம்பொலி முழங்க
செககண செககண செககண செகண
மொகமொக மொகமொக மொகமொக மொகென
நகநக நகநக நகநக நகென
டிகுகுண டிகுடிகு டிகுகுண டிகுண
ரரரர ரரரர ரரரர ரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி
டுடுடு டுடுடு டுடுடு டுடு
டகுடகு டிகுடிகு டங்கு டிங்குகு
விந்து விந்து மயிலோன் விந்து
முந்து முந்து முருகவேள் முந்து
என்றனை யாளும் ஏரகச் செல்வ
மைந்தன் வேண்டும் வரமகிழ்ந் துதவும்
லாலா லாலா லாலா வேசமும்

லீலா லீலா லீலா விநோதனென்று
உன்திரு வடியை உறுதியென் றெண்ணும்
என்தலை வைத்துன் இணையடி காக்க
என்னுயிர்க் குயிராம் இறைவன் காக்க
பன்னிரு விழியால் பாலனைக் காக்க
அடியேன் வதனம் அழகுவேல் காக்க
பொடிபுனை நெற்றியைப் புனிதவேல் காக்க
கதிர்வே லிரண்டும் கண்ணினைக் காக்க
விழிசெவி யிரண்டும் வேலவர் காக்க
நாசிக ளிரண்டும் நல்வேல் காக்க
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க
முப்பத் திருபல் முனைவேல் காக்க
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க
கன்ன மிரண்டும் கதிர்வேல் காக்க
என்னிளங் கழுத்தை இனியவேல் காக்க
மார்பை இரத்தின வடிவேல் காக்க
சேரிள முலைமார் திருவேல் காக்க
வடிவே லிருதோள் வளம்பெறக் காக்க
பிடரிக ளிரண்டும் பெருவேல் காக்க
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க
பழுபதி னாறும் பருவேல் காக்க
வெற்றிவேல் வயிற்றை விளங்கவே காக்க
சிற்றிடை யழகுறச் செவ்வேல் காக்க
நாணாங் கயிற்றை நல்வேல் காக்க
ஆண்குறி இரண்டும் அயில்வேல் காக்க
பிட்ட மிரண்டும் பெருவேல் காக்க
வட்டக் குதத்தை வடிவேல் காக்க
பணைத்தொடை யிரண்டும் பருவேல் காக்க
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க
ஐவிர லடியிணை அருள்வேல் காக்க
கைக ளிரண்டும் கருணைவேல் காக்க
முன்கை யிரண்டும் முரண்வேல் காக்க
பின்கை யிரண்டும் பின்னவ ளிருக்க
நாவிற் சரஸ்வதி நற்றுணை யாக
நாபிக் கமலம் நல்வேல் காக்க
முப்பா நாடியை முனைவேல் காக்க
எப்பொழுது மெனை எதிர்வேல் காக்க
அடியேன் வதனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க
வரும்பகல் தன்னில் வச்சிரவேல் காக்க

அரையிரு டன்னில் அனையவேல் காக்க
ஏமத்திற் சாமத்தில் எதிர்வேல் காக்க
தாமத நீக்கிச் சதுர்வேல் காக்க
காக்க காக்க கனகவேல் காக்க
நோக்க நோக்க நொடியி நோக்க
தாக்க தாக்க தடையறத் தாக்க
பார்க்கப் பார்க்கப் பாபம் பொடிபட
பில்லி சூனியம் பெரும்பகை யகல
வல்ல பூதம் வலாஷ்டிகப் பேய்கள்
அல்லல் படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைகள் தின்னும் புழைக்கடை முனியும்
கொள்ளிவாய்ப் பேய்களும் குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரமரா சஷதரும்
அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட
இரிசி காட்டேரி இத்துன்ப சேனையும்
எல்லினு மிருட்டிலும் எதிர்ப்படும் அண்ணரும்
கனபூசை கொள்ளும் காளியோ டனைவரும்
விட்டாங் காரரும் மிகுபல பேய்களும்
தண்டியக் காரரும் சண்டா ளர்களும்
என்பெயர் சொல்லவும் இடிவிழுந் தோடிட
ஆனை யடியினில் அரும்பா வைகளும்
பூனை மயிரும் பிள்ளைக ளென்பும்
நகமும் மயிரும் நீள்முடி மண்டையும்
பாவைக ளுடனே பலகல சத்துடன்
மனையிற் புதைத்த வஞ்சனை தனையும்
ஒட்டியச் செருக்கும் ஒட்டியப் பாவையும்
காசும் பணமும், காவுடன் சோறும்
ஓதுமஞ் சனமும், ஒருவழிப் போக்கும்
அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட
மாற்றான் வஞ்சகர் வந்து வணங்கிட,
காலதூ தாளெனைக் கண்டாற் கலங்கிட
அஞ்சி நடுங்கிட அரண்டு புரண்டிட
வாய்விட் டலறி மதிகெட் டோடப்
படியினில் முட்டப் பாசக் கயிற்றால்
கட்டுட ணங்கம் கதறிடக் கட்டு!
கட்டி யுருட்டு கால்கை முறியக்
கட்டு கட்டு கதறிடக் கட்டு
முட்டு முட்டு முழிகள் பிதுங்கிட
செக்கு செக்கு செதில் செதிலாக
சொக்கு சொக்கு சூர்ப்பகைச் சொக்கு

குத்து குத்து கூர்வடி வேலால்
பற்று பற்று பகலவன் தணலெரி
தணலெரி தணலெரி தணலது வாக
விடுவிடு வேலை வெருண்டது வோடப்
புலியும் நரியும் புன்னரி நாயும்
எலியும் கரடியும் இனித்தொடர்ந் தோடத்
தேளும் பாம்பும் செய்யான் பூரான்
கடிவிட விஷங்கள் கடித்துய ரங்கம்
ஏறிய விஷங்கள் எளிதினி லிறங்க
ஒளிப்புஞ் சுளுக்கும் ஒருதலை நோயும்
வாதம் சயித்தியம் வலிப்புப் பித்தம்
சூலைசயம் குன்மம் சொக்குச் சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல்விப் புரிதி
பக்கப் பிளவை படர்தொடை வாழை
கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி
பற்குத் தரணை பருவரை யாப்பும்
எல்லாப் பிணியும் என்றனைக் கண்டால்
நில்லா தோட நீயெனக் கருள்வாய்
ஈரே ழுலகமும் எனக்குற வாக
ஆணும் பெண்ணும் அனைவரு மெனக்கா
மண்ணா ளரசரும் மகிழ்ந்துற வாகவும்
உன்னைத் துதிக்க உன்திரு நாமம்
சரஹண பவனே! சைலொளி பவனே!
திரிபுர பவனே! திகழொளி பவனே!
பரிபுர பவனே பவமொழி பவனே
அரிதிரு மருகா அமரா பதியைக்
காத்துத் தேவர்கள் கடுஞ்சிறை விடுத்தாய்
கந்தா குகனே கதிர்வேலவனே!
கார்த்திகை மைந்தா கடம்பா! கடம்பனை
இடும்பனை யழித்த இனியவேல் முருகா!
தணிகா சலனே சங்கரன் புதல்வா!
கதிர்கா மத்துறை கதிர்வேல் முருகா!
பழநிப் பதிவாழ் பால குமாரா!
ஆவினன் குடிவாழ் அழகிய வேலா!
செந்தின்மா மலையுறும் செங்கல்வ ராயா!
சமரா புரிவாழ் சண்முகத் தரசே!
காரார் குழலாள் கலைமகள் நன்றாய்
என்னா விருக்க யானுனைப் பாட
எனைத்தொடர்ந் திருக்கும் எந்தை முருகனைப்

# நன்றி நவிலல்



எமது குடும்பத்தலைவர் இறைவன் பதம் அடைந்த
போது வருகை தந்து எமது துயரில் பங்கு கொண்ட
உயர் தொழில் நுட்ப நிறுவக இயக்குனர்,
விரிவுரையாளர்கள், ஊழியர்கள், சைவ வித்தியா
விருத்திச்சங்க உறுப்பினர்களுக்கும், அனுதாப உரைகள்,
அஞ்சலிகள் வெளியிட்டவர்கள், பத்திரிகைகளில்
கண்ணீர் அஞ்சலிகள் வெளியிட்டவர்கள், மற்றும்
நேரடியாக வந்து கலந்து கொண்ட உற்றார், உறவினர்,
நண்பர்கள், அபிமானிகள் அனைவருக்கும் மற்றும்
தொலைபேசிமூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும்,
அனுதாபத் தந்தி ஆறுதல் மடல் அனுப்பியோர்க்கும்,
குறித்த நேரத்தில் குறுகிய நாட்களில் சிறந்த முறையில்
இம்மலரை அச்சிட்டுத் தந்த சாந்தி அச்சகத்தாருக்கும்
எமது இதயம் கனிந்த நன்றிகள்.

நன்றி.

சுழிபுரம்
15-12-2000

குடும்பத்தினர்

சாந்தி அச்சகம்
கொம்பியூட்டர் ஓவ்செற் பிறின்ட்
நாச்சிமார்கோவிலடி,
யாழ்ப்பாணம். போன். 2821